# உரிமைத் தமிழ்த் தேசம்


தமிழ்த் தேசிய விடுதலை இயக்கத் திங்களேடு

உரிமை: 4தேசம்: 1 திருவள்ளுவர்ஆண்டு 2052 கார்த்திகை / நவம்பர் 2021 ஆசிரியர்: **தியாகு** பொறுப்பாசிரியர்: சமந்தா

தோழர் தியாகுவின் அறிவுக் குரல் கேட்க https://www.youtube.com/watch?v=NaMbPqrXqPo&feature=youtu.be


## தேசத்தின் குரல்

## உழவர் போராட்ட வெற்றி விதைத்துள்ள நம்பிக்கை




நீண்ட உழவர் போராட்டத்துக்குக் காரணமாக அமைந்த மூன்று வேளாண் சட்ட்டங்களையும் விலக்கிக் கொள்வதாக இந்தியத் தலைமையமைச்சர் நரேந்திர மோதி அறிவித்துள்ளார். இது உழவர் போராட்டத்துக்குக் கிடைத்துள்ள பெருவெற்றி!

மோதி இப்படி அறிவித்திருப்பது ஏன்? தான் செய்த பிழையை உணர்ந்து விட்டாரா? உழவர் தரப்பு நியாயத்தை ஏற்றுக் கொண்டு விட்டாரா? உழவர்களின் போராட்ட உறுதியும் ஈகமும் மோதியின் மனத்தை மாற்றி விட்டனவா? இல்லை,

## உள்ளே...


1. தேசத்தின் குரல்– 1
2. இந்திய ஒன்றியத்திலும் பாகிஸ்தானிலும் தேசிய இனச் சிக்கல் - 6
3. சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் காவலனாக பாஜக - 12
4. மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு (GDP) - 25
5. உற்பத்தி முறையில் தேசிய வருவாய் - 32
6. வருவாய் முறையில் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு - 37
7. செலவீட்டு முறையில் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு - 39
8. ‘ஜிடிபி’-யின் குறைபாடுகள் - 42
9. இளைஞர் அரண் அறைகூவல் - 45



பதிவு எண் :R.Dis. No. 1964/2014





இல்லை, இல்லை!

மோதி சொல்கிறார்: நாட்டு நலனுக்காக வேளாண் துறையில் சீர்திருத்தம் கொண்டுவந்தார்களாம்! உழவர்களின் நலனுக்காகப் புதிய வேளாண் சட்டங்கள் இயற்றினார்களாம்! சிறு குறு உழவர்களுக்கு முன்னேற்றமும் அதிகாரமும் வழங்க நினைத்தார்களாம்! கிராமத்து வறியவர்களின் ஒளிமயமான எதிர்காலத்துக்காக, நல்லெண்ணத்துடன், நல்ல நோக்கத்துடன் சட்டம் கொண்டுவந்தார்களாம்!

மோதி கொஞ்சம் கூட சிரிக்காமல் சொல்கிறார்: சட்டம் கொண்டுவருவதற்கு முன்பு அனைத்து உழவர் சங்கங்களோடும் விவாதித்தார்களாம்! எவ்வளவு பெரிய பொய்? மோதி தன் வீட்டுத் தோட்டக்காரருடன் விவாதிருப்பரோ? வேளாண் சட்டங்களின் நற்பயனை உழவர்களுக்கு விளக்கிச் சொல்ல எவ்வளவோ முயன்றும் அவர்கள் விளங்கிக் கொள்ளவில்லையாம்! ஆகவே




பழி யார் மீது? போராடிய உழவர்கள் மீதுதான்! சட்டம் தொடர்பான தவறான தகவல் பரப்பப்பட்டு அதையே அவர்களும் நம்பி விட்டார்களாம்! 'இது எப்படி இருக்கு?'

இருந்தும், நாட்டின் மூலைமுடுக்கெல்லாம் வேளாண் சட்டங்களைப் புரிந்து கொண்டு ஆதரித்தவர்களுக்கு நன்றி சொல்கிறார் மோதி! யாரோ அவர் யாரோ? அண்ணாமலையா? அமித்சாவா?

மோதியின் பசப்பு வார்த்தைகள் உழவர்களிடம் அன்றும் எடுபடவில்லை, இன்றும் எடுபடாது! என்றும் எடுபடப்போவதில்லை. இந்த வெற்றி எளிதில் வரவில்லை. அமைதியான அறப்போராட்டத்தில் 700க்கு மேற்பட்ட உழவர்கள் உயிரீகம் செய்தார்கள். கடைசிக்கும் கடைசியாக உத்தரப் பிரதேசம் லக்கிம்பூர் கெரியில் ஊர்வலம் சென்ற உழவர்கள் மீது வண்டியேற்றிக் கொன்றது காவிக்கும்பல். உழவர்களின் உயிரிழப்புக்காகவோ அவர்கள் அடைந்த துன்பங்களுக்காகவோ வருந்தி ஒரே ஒரு சொல் உதிர்க்கவில்லை மோதி! லக்கிம்பூர் கெரி



படுகொலை பற்றியெல்லாம் திருவாய் திறக்க நேரம் ஏது?

போராடிய உழவர்களை சீன, பாகிஸ்தான் ஆதரவாளர்கள் என்றும், காலிஸ்தானியர்கள் என்றும் பயங்கரவாதிகள் என்றும் எத்தனை எத்தனைப் பழிதூற்றல்கள்! சாலைகளில் பள்ளம் வெட்டியும், பெரிய பெரிய ஆணி அடித்தும், தடியடி, கண்ணீர்ப்புகை, தண்ணீர்ப் பீரங்கி ஏவியும் எத்தனை எத்தனை அடக்குமுறைகள்! மிரட்டல்கள், பிரித்தாளும் சூழ்ச்சிகள், பொய்மைகள் என்று எத்தனை எத்தனை இழிந்த உத்திகள்? அத்தனைக்கும் அயராமல் முகங்கொடுத்து உழவர்களின் ஒற்றுமையும் கட்டுப்பாடும் குலையாமல் வழிநடத்திய உழவர் கூட்டமைப்பான ’சம்யுக்த கிசான் மோர்ச்சா’வை எவ்வளவு போற்றினாலும் தகும். ஆனால் போற்றினால் மட்டும் போதாது! இனி வரும் களங்களுக்கு அவர்களிடமிருந்து பாடம் கற்கவும் வேண்டும்.

மோதி ஏன் பின்னடித்தார்? இடைத்தேர்தல்களில் விழுந்த அடி ஒலித்த எச்சரிக்கை மணி! வரவிருக்கும் ஐந்து மாநிலச் சட்டமன்றத் தேர்தலில் தோற்று விடுவோம், அடுத்த நாடளுமன்றத்

தேர்தலிலும் தோற்று விடுவோம் என்ற அச்சம்தான் காரணம் என்பது அண்ணாமலைக்கே விளங்கக் கூடிய எளிய செய்திதான்! மோதியை மக்கள் நம்ப மாட்டார்கள், வரப்போகும் தேர்தலிலும் தோல்வியே தருவார்கள் என்பது நல்ல உள்ளங்களின் நம்பிக்கை.

வேளாண் சட்டங்கள் மட்டுமல்ல மோதியின் குற்றம்! இந்தச் சட்டங்களை நாடாளுமன்றத்தில் இயற்றுவதற்காக எதிர்க்கட்சிகளைக் கருத்துக்கூட சொல்ல விடாமல் குடியாட்சியத்தைக் கேலிக்கூத்தாக்கியது குற்றமல்லவா? ஒவ்வொரு சிக்கலிலும் நாடாளுமன்றத்தில் குடியாட்சியம் கொல்லப்படுகிறதே, அது எவ்வளவு பெரிய குற்றம்!

மோதி உழவர்களுக்குச் செய்த நன்மைகள் என்று பீற்றிக் கொள்வதெல்லாம் பொய் மூட்டை! காட்டாக, உரத்துக்கு நல்கை (மானியம்) என்பார்! அது போய்ச்சேரும் இடம் உரநிறுவனங்களும் பெருங்குழுமங்களுமே என்பதுதான் உண்மை!

மோதி அரசின் வேளாண் சட்டங்களும் அவற்றுக்கு எதிரான உழவர் போராட்டங்களும் உலக அலவில் கவனம் பெற்றன. ஐநா உணவுரிமைச் சிறப்புக் குழு இந்திய அரசிடம் விளக்கம் கேட்டுக் கடிதம் அனுப்பிற்று. ஆனால் இப்போதும் மோதி மனம் வருந்தவில்லை, குணம் திருந்தவில்லை என்பதை மறந்து விடலாகாது.

மேலும், மின்சாரத் திருத்தச் சட்டம், விளைபொருளுக்கு சிறும ஆதரவு விலை (MSP) போன்ற பல சிக்கல்கள் இன்னும் தீர்ந்த பாடில்லை. மூன்று வேளாண் சட்டங்கள் வழியாகச் செய்ய நினைத்தவற்றை வேறு வழிகளில் செய்ய பாசக அரசு முயலும் என்ற எச்சரிக்கை உணர்வும் தேவை.

இறுதியாக, உழவர் போராட்ட வெற்றியின் வரலாற்று முகன்மை மக்கள் போராட்டங்களின் மாவல்லமையை உணர்த்தியிருப்பதாகும். நம்மால் பாசிச ஆற்றல்களைத் தோற்கடிக்க முடியும் என்ற நம்பிக்கையை உழவர்கள் விதைத்துள்ளார்கள். நீரூற்றி வளர்க்க நாமனைவரும் கடமைப்பட்டுள்ளோம்.

ஏ.எம். தியாக்கோவ்:


# இந்திய ஒன்றியத்திலும் பாகிஸ்தானிலும் தேசிய இனச் சிக்கல்

[1939-1949 காலத்தில் இந்தியத் துணைக்கண்டத்தில் ஏற்பட்ட நிகழ்ச்சிப்போக்குகள் குறித்து விரிவான ஆய்வுகள் மேற்கொண்ட சோவியத்து இந்தியவியலர்களில் முதன்மையானவர் ஏ.எம். தியாக்கோவ். அவர் எழுதிய ஆய்வுக் கட்டுரைகள் 1952இல் சோவியத்து (குமுகியக் குடியரசுகள்) ஒன்றியத்தின் (USSR) கீழையியல் ஆய்வுக் கழகத்தால் வெளியிடப்பட்டன. இவற்றில் ஒன்றுதான் "இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் தேசிய இனச் சிக்கல் பற்றி" தியாக்கோவ் எழுதிய கட்டுரை. இரண்டாம் உலகப் போருக்குப் பிறகான காலத்தில் இந்தியாவின் தேசிய இனச் சிக்கல் குறித்து அவர் செய்த முகன்மையான ஆய்வின் முடிவுகள் இந்தக் கட்டுரையில் இடம்பெறுகின்றன. தியாக்கோவின் கருத்துரைகளை இந்தியப் பொதுமை இயக்கம் பொருட்படுத்தாமல் விட்டு விட்டது. இப்போதும் கூட இந்தியத் துணைக்கண்டத்தில் தேசிய இனச்சிக்கலைப் புரிந்து கொள்ள தியாக்கோவின் பார்வைகள் துணைசெய்யக் கூடியவை என்பதால் அவரது கட்டுரையை இங்கு தமிழாக்கம் செய்து வெளியிடுகிறோம்.]

## இந்திய ஒன்றியத்தில் தேசிய இனச்சிக்கல்

புதிதாக நிறுவப்பட்டுள்ள இரு தன்னரசுகளான (டொமினியன்கள்) இந்தியாவிலும் பாகிஸ்தானிலும் தேசிய இனச் சிக்கல் பெரிதும் அக்கறைக்குரிய சிக்கல்களில் ஒன்றாகியுள்ளது. இந்திய ஒன்றியத்திலும் பாகிஸ்தானிலும் நிலக்கிழார்களும் குறுநில மன்னர்களும் முற்றுரிமை (ஏகபோக) முதலாளர்களும் சேர்ந்த பிற்போக்குக் கும்பல் அதிகாரத்துக்கு வந்துள்ளது. பிரித்தானியரது நேராளுகைக் காலத்திலேயே கூட, இந்திய முதலாளர் வகுப்பின் முற்றுரிமைக் குழுக்கள் எப்படியோ தமக்கென்று ஒருவகை உயர்நிலையைக் கைப்பற்றுவதில் வெற்றி கண்டு விட்டன. இந்தியாவில் முதலிய வளர்ச்சியின் குறிப்பான தனித்தன்மைகளின் காரணத்தால் நாட்டின் பெரிய முதலியக் குழுக்கள் (முதலியம் = முதலாளித்துவம் [capitalism]) இந்தியாவின் அனைத்துத் தேசிய இனங்களையும் சேர்ந்த முதலாளர்களின் முழுப் பேராளர்களாக இருக்கும் நிலை இல்லவே இல்லை. முதலிய வளர்ச்சியின் தொடக்கக் காலத்தில் தேசிய முதலாளர்களின் முகன்மைப்

பிரிவினர் பம்பாய் (மும்பை) முதலாளர் வகுப்பின் தரகுப் பிரிவிலிருந்து வெளிப்பட்டவர்களாகவே இருந்தனர்: அவர்கள் இந்திய குசராத்தியரும், குசராத்தியரோடு நடைமுறையளவில் கலந்து விட்ட பார்சிகளுமான முதலாளர்களின் பேராளர்களாக இருந்தனர். குசராத்தில் மட்டுமல்லாமல், பம்பாய் நகரத்திலும், பம்பாய் மாகாணம், மத்திய மாகாணம் ஆகியவற்றின் மராத்தி வட்டாரத்திலும் கூட, அதே போல் பம்பாய் மாகாணத்தின் கன்னடப் பகுதிகளிலும் நெசவுத் (ஜவுளி) தொழிலின் ஒருபெரும் பகுதி மேற்கூறிய முதலாளர் குழுவின் கையில் இருந்தது.



முதல் உலகப் போருக்குப் பிறகு இராஜஸ்தானத்தைச் சேர்ந்த மார்வாரி வட்டிக்காரர்களின் மூலமுதல் தொழில்துறைக்குள் பாயத் தொடங்கிற்று. தொடக்கக் காலத்திலிருந்தே இந்த வட்டிக்கார்கள் வங்கம் உள்ளிட்ட வட இந்தியா முழுவதிலும் முனைப்புடன் செயல்பட்டு, தெற்கே தக்காணத்தில் நுழைந்து தமிழ்ப் பகுதிகள் வரை சென்றடைந்தார்கள். அங்குதான் சற்றே வலுவான தமிழ்க் கடுவட்டி மூலமுதலால் அவர்களின் முன்னேற்றம் தடுத்து நிறுத்தப்பட்டது.

ஒருசில விதிவிலக்குகள் நீங்கலாக கிட்டத்தட்ட எல்லா முற்றுரிமை முதலியக் குழுக்களுமே --- டாட்டா, பிர்லா, டால்மியா, சிங்கானியா, பட் போன்றவை யாவும் --- குசராத்தி அல்லது மார்வாரி மூலமுதல் அணிகளைச் சேர்ந்தவைதாம். சென்னை மாகாணத்தில் மட்டுமே, தமிழ் முதலாளர்களும், சற்றே குறைந்த அளவில் தெலுங்கு, கன்னட, மலையாளி முதலாளர்களும் வடக்கிலிருந்து முற்றுரிமைக் குழுக்கள் இப்படி ஊடுருவுவதை எதிர்த்தனர். குறிப்பான இந்த முற்றுரிமைக் குழுக்கள் இந்தியக் குறுநில மன்னர்களோடும் நிலக்கிழார்களோடும் பிரித்தானிய மூலமுதலோடும் மிக நெருங்கிய பிணைப்புடையவை ஆகும்.

இந்திய முதலாளர்களின் முற்றுரிமைக் குழுக்கள் இந்திய அங்காடி முழுவதையும்

கைப்பற்றிக் கொள்வதில் அக்கறை கொண்டவை. இந்திய முதலாளர்கள் பெருமளவுக்கு இந்தியாவின் இரு தேசிய இனக்குழுக்களைச் சேர்ந்த வணிகச் சாதிகளைச் சேர்ந்தவர்கள் என்ற உண்மை ஓரளவு பரந்த தன்னாட்சிக்கான இந்திய மக்களினங்களின் போராட்டத்துக்கு உரமூட்டுகிறது.



உறுதியாகச் சொல்லலாம்: பிரித்தானியர் இந்தியாவை மத அடிப்படையில் பிரித்த போது, இந்திய முதலாளர்கள் தமது நலன்களையே மனத்திற்கொண்டு அந்தப் பிரிவினையையும் எதிர்த்தார்கள், ஒன்றுபட்ட (அகன்ற) இந்தியாவுக்கான இயக்கத்தை ஆதரித்தார்கள், புரட்சிக்கு அஞ்சியே நாட்டுப் பிரிவினையை ஏற்றுக் கொண்டார்கள். முதலில் நாட்டைப் பிரிக்காமல் இந்தியாவுக்கு விடுமை (சுதந்திரம்) வழங்க பிரித்தானிய ஆட்சியாளர்கள் மறுத்து விட்டதால்தான் அவர்கள் மவுண்ட்பாட்டன் திட்டத்தை ஏற்றுக் கொண்டார்கள்.

இவ்வாறு, இந்திய தேசிய காங்கிரஸ் அதிகாரத்துக்கு வந்து விட்ட நிலையிலும், இந்தக் குழுக்களின் நலன்களுக்குப் பேராளர் (பிரதிநிதி) என்ற முறையிலும், நிலக்கிழார்கள், குறுநிலமன்னர்கள் ஆகியோருடன் சேர்ந்து தனது 1920ஆம் ஆண்டுத் தேசியத் திட்டத்தையே நிறைவேற்ற மறுத்தது. மொழிகளின் அடிப்படையில் மாகாணங்கள் என்பவற்றை அமைப்பது பெருமுதலாளர்களுக்கோ குறுநில மன்னர்கள் மற்றும் நிலக்கிழார்களுக்கோ நலம்பயப்பதாகாது. மராத்தியரும் தெலுங்கர்களும் வங்காளிகளும் ஒரியர்களும் கன்னடர்களும் மற்றவர்களுமான வலுக்குன்றிய தேசிய முதலாளர்களிடமிருந்து எழும் போட்டி குறித்து இந்திய முற்றுரிமை முதலாளர்கள் அச்சப்பட்டார்கள் என்பதே காரணம். இந்தியப் பெருமுதலாளர் வகுப்புக்கும், குறுநில மன்னர்களுக்கும் நிலக்கிழார்களுக்கும் தெரியும்: 'மொழிவழி' மாகாணங்களில், அதாவது தேசிய மாகாணங்களில் தன் முகவர்களின் - தேசிய காங்கிரஸ் தலைமையின் - சமூக அடித்தளம் குறுகியதொன்று என்பது. ஏனென்றால் இந்த இடங்களில்

கூடுதல் குடியாட்சிய (ஜனநாயக) இயல்பு கொண்ட கூறுகள் வலுக்கூடியுள்ளன என்பதால் டாட்டா, பிர்லா, வகையறாவுக்கு ஏற்ற கொள்கைகளை நிறைவேற்ற மாட்டா. வலுமிக்கதோர் உழவர் இயக்கமும் தேசிய இன இயக்கமும் இந்த மாகாணங்கள் பலவற்றிலும் பரந்த தேசியத் தன்னாட்சியும் பிரபுத்துவ எதிர்ப்புப் போராட்டத்தைத் தீவிரமாக்குவதற்கு இன்னும் தோதான நிலைமைகளைத் தோற்றுவிக்கும்.

ஆகவே இந்திய தேசிய காங்கிரஸ் அதிகாரத்துக்கு வந்தவுடனேயே 1945இல் வெளியிடப்பெற்ற தன் தேர்தல் அறிக்கையை ஒதுக்கித் தள்ளி விட்டு, மொழிவழி மாகாணங்கள் என்பவற்றைத் தோற்றுவிப்பது குறைந்தது 10 ஆண்டு காலம் தள்ளி வைக்கப்படும் என்று அறிவித்தது.

1948 ஜூலையில் இந்திய அரசமைப்புப் பேரவையின் தலைவர் இராஜேந்திர பிரசாத் ஆந்திரம், கர்நாடகம், மகாராட்டிரம், கேரளம் ஆகிய 'மொழிவழி' மாகாணங்களிலான தேசிய இயக்கத்தின் அழுத்தத்தால் ஓர் ஆணையத்தை அமைத்தார் - சிக்கலை ஆராய்வதற்கென்று சொல்லிக் கொண்டாலும், சிக்கலைப் புதைப்பதே உண்மை நோக்கம்.

1948 திசம்பரில், ஜெய்ப்பூரில் நடந்த தேசிய காங்கிரஸ் கூட்டத்தில் மேற்கூறிய இந்திய வட்டாரங்களின் பேராளர்கள் தந்த அழுத்தத்தால் 'மொழிவழி மாகாண'ச் சிக்கலை', அதாவது இந்தியாவின் ஆட்சிப் பிரிவுகளை மீள்கட்டமைப்புச் செய்யும் சிக்கலை ஆராய்வதற்காக ஓர் உட்குழு அமைக்கப்பட்டது.

எதிர்பார்த்தது போலவே, உட்குழு 1949 ஏப்ரலில் முன்வைக்கப்பட்ட அறிக்கையில் தேசிய இன மாகாணங்கள் அமைக்க முடியாதென்று தீர்மானித்தது. இந்த முடிவுக்குச் சொல்லப்பட்ட காரணம் 'அரசதந்திர' வடிவில் தரப்பட்ட போதிலும் இந்தியாவில் 'மொழிவழி', அதாவது தேசிய இன மாகாணங்கள் அமைக்க ஆட்சியாளர்கள் மறுப்பதன் உண்மைக் காரணத்தை வெளிப்படுத்துகிற அளவில் கருத்துக்குரியது. இந்திய தேசிய காங்கிரசின் பழைய கொள்கை 'மொழிவழி' மாகாணங்கள் அமைப்பதற்கு ஆதரவாக இருந்தது என்றாலும் அப்போது அதற்கொரு நியாயம் இருந்தது, ஏனென்றால் இந்தக் கொள்கையைச் செயலாக்கும் கேள்வி அந்தக் கட்டத்தில் செயல்திட்ட நிரலில் இல்லை என்று உட்குழுவின் அறிக்கை சுட்டிக்காட்டிற்று.

காங்கிரஸ் திட்டம் வெறும் வாய்வீச்சுதான் என்று உட்குழுவே ஒப்புக் கொள்கிறது என்பதே இதன் பொருள்.

மேலும், இந்தியாவின் இப்போதைய மாகாணங்கள் செயற்கையானவை என்றாலும், நீண்ட காலமாய் இருந்து வருவதால் ஒருவிதமான நிலைத்தன்மையை ஈட்டி விட்டன, எனவே அவற்றின் எல்லைகளைக் கலைப்பது விரும்பத்தக்கதன்று என உட்குழு சொல்கிறது. இந்த வாதுரை ஒரு காலத்தில் இந்திய தேசிய காங்கிரசுக்கு எதிராகக் கடைந்தெடுத்த பிரித்தானிய வல்லரசியர் (ஏகாதிபத்தியர்) தொடுத்த கந்தல் முடிவுகளையே திருப்பிச் சொல்கிறது. ஆனால் உட்குழு இந்த வாதுரையை மைய வாதுரையாகக் கருதவில்லை. தேசிய மாகாணங்கள் அமைப்பதற்கு எதிராக முன்வைக்கப்பட்ட முதன்மையான வாதுரைகள் பின்வருமாறு:

இந்தியாவைப் பிரித்ததே அதனளவில் பிரிவினைப் போக்குகளைத் தோற்றுவித்தது; தேசிய மாகாணங்கள் அமைப்பது இந்தப் போக்குகளை வலுவாக்கும்; ஏனென்றால் பல தேசிய இன வட்டாரங்களில் ’சீர்குலைவு’ ஆற்றல்கள் இயங்கி வருகின்றன.


இந்தியாவால் பொருளியல் தற்சார்பைச் சாதிக்க இயலவில்லை என்று உட்குழு அறிந்தேற்கிறது. ஆனால் இந்த வரம்புக்குட்பட்ட (அழுத்தம் எனது - தியாக்கோவ்) தற்சார்பை (சுதந்திரத்தை) காக்கும் பொருட்டு இந்தியாவை வலுவாக்க வேண்டிய தேவையுள்ளது;

மொழி என்பது இணைக்கும் கருவி மட்டுமன்று, மக்களினம் ஒன்றைப் பிறிதொன்றிலிருந்து பிரித்து வைக்கும் தடையுமாகும் என்பதை மனத்திலிருத்த வேண்டும்;

ஆந்திரம், கேரளம், மகாராட்டிரம், கர்நாடகம் ஆகிய புதிய மாகாணங்கள் தோற்றுவிக்கப்பட்டால் சமஸ்தான அரசுகள் கலைக்கப்படுவதில் போய் முடியும். இது மோசமான முற்காட்டாகி விடும். ஏனென்றால் சமஸ்தான அரசுகள் பற்றிய சிக்கலை வேறு வழிகளில் அணுகி வருகிறோம். இவ்வாறு ‘மொழிவழி மாகாணங்கள் அமைப்பதைக் குறைந்தது 10 ஆண்டுக் காலம் ஒத்திப்போட வேண்டும்.

ஆட்சியாளர்களும் இந்திய தேசிய காங்கிரஸ் தலைமையும் இந்தியாவின் ஆட்சிப் பிரிவினையை மீள்கட்டமைப்புச் செய்ய விரும்பாமைக்கான காரணங்கள் இங்கே தெள்ளத் தெளிவாகின்றன.

இப்படியொரு மீள்கட்டமைப்பு எவ்விதமான முடிவுகளுக்கு இட்டுச்செல்லக் கூடும் என்பதை நிலக்கிழார்களும் குறுநில மன்னர்களும் முற்றுரிமை முதலாளர் குழுக்களும் சேர்ந்த



பிற்போக்குக் கூட்டணி அறிந்துள்ளது. வட்டாரங்கள் பலவற்றிலும் சீர்குலைவு ஆற்றல்கள் செயல்பட்டு வருகின்றன என்று, அதாவது மக்களினங்களின் வலுவான இயக்கம் இருந்து வருவதை, உட்குழு போதிய அளவு தெளிவாக்குகிறது. இந்தியா பொருளியல் வகையில் பிரித்தானிய வல்லரசியத்தைச் சார்ந்திருப்பதை அறிந்தேற்கும் உட்குழு, இதனைக் கணக்கில் கொள்ள வேண்டும் என்கிறது. உட்குழுவின் வாதுரைகளிலிருந்து தெளிவாகும் உண்மை என்னவென்றால், விரிவான தன்னாட்சி கொண்ட மாகாணங்கள் அமைவதில் குறுநில மன்னர்களுக்கும் நிலக்கிழார்களுக்கும் பெருமுதலாளர்களுக்கும் அக்கறை இல்லை என்பதே. அதிகாரத்துக்கு வந்து விட்ட இவர்கள் இந்திய மக்களுக்கு எவ்வித வளர்ச்சியும் வேண்டுமென விரும்பவில்லை. அவர்களை அடிமைப்படுத்தவே முயன்று வருகிறார்கள். பிரபுத்துவ சமஸ்தான அரசுகள் ஒழிக்கப்படுவதையும் அவர்கள் விரும்பவில்லை.

இந்த முடிவுகள் அறிவிக்கப்படுவதற்கு சற்று முன்னதாக திருவிதாங்கூர், கொச்சி சமஸ்தான அரசுகள் ஒன்றிணைக்கப்பட்டன. இந்நிகழ்வுக்காக திருவிதாங்கூரின் தலைநகரத்தில் நடந்த விழாவில் இந்திய தேசிய காங்கிரஸ் தலைவர் சீதாராமையா கலந்து கொண்டார். இந்த ஒன்றுபட்ட சமஸ்தான அரசில் சென்னை மாகாணத்தின் மலபார் மாவட்டத்தை சேர்த்து ஐக்கியக் கேரளம் அமைக்க அங்கே முடிவெடுக்கப்பட்டது. சீதாராமையா

இந்த ஒன்றிணைப்பை எதிர்த்துப் பேசவே இல்லை. ஆனால் மலபாரிலும் அந்த இரு சமஸ்தானங்களிலும் வெகுமக்கள் இவ்வாறான ஒன்றிணைப்புக்கு எதிராக ஆர்ப்பாட்டம் செய்தார்கள். சமஸ்தான அரசுகளை ஒழித்து ஐக்கிய கேரளத்தைத் தோற்றுவிக்கக் கோரினார்கள்.

இந்தியக் குறுநில மன்னர்களும் பெருநிலக்கிழார்களும் ஆட்சியாளர்களின் தேசிய இனக் கொள்கையை முழுமூச்சாக ஆதரிக்கின்றார்கள். 'மொழிவழி' மாகாணங்கள் அமைக்கப்படுவது சமஸ்தான அரசுகள் தொடர்வதற்கு அச்சுறுத்தலாவதைத் தவிர்க்கவியலாது. இவ்வாறு, குறுநில மன்னர்கள் இந்த வழிமுறைகளின் செயலாக்கத்தை அழுத்தமாக எதிர்க்கின்றனர். (தொடரும்)

# சமூக பொருளாதார ஏற்றத்தாழ்வுகளின் காவலனாக பாஜக:

**சமந்தா**



இந்தியாவில் அக்டோபர் 31 வரை கோவிட் தடுப்பு மருந்து ஒரு முறை செலுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை 54.9 விழுக்காடாகவும், கோவிட் தடுப்பு மருந்து இருமுறை செலுத்திக் கொண்டவர்களின் எண்ணிக்கை 24.7 விழுக்காடாகவும் உள்ளது.தடுப்பு மருந்து, பொருளாதார சீர்திருத்தங்களால் இந்தியப் பொருளாதாரம் மிக வேகமாக மீட்சியடைவதாகவும் கோவிட் தொற்றுக்கு முந்தைய பொருளாதார நிலையில் 90 விழுக்காட்டை அடைந்துவிட்டதாகவும் நிதியமைச்சகம் அறிவித்துள்ளது. 2022ல் இந்தியாவின் மொத்தப் பொருளாக்க மதிப்பு இரட்டை இலக்க விகிதத்தில் விரிவடையும் என நிதியமைச்சர் நிர்மலா சீதாராமன் நம்பிக்கை தெரிவித்துள்ளார்.

நரேந்திர மோடி தலைமையிலான பாஜக அரசு ஏற்படுத்திய கட்டமைப்பு சீர்திருத்தங்களால் ஊழல் ஒழிந்து பணவீக்கம் கட்டுப்படுத்தப்பட்டுள்ளது. இந்தியப் பொருளாதாரம் வலுவாக மீண்டு வருகிறது, நுகர்வு அதிகரித்துள்ளது. இதனால் கொரோனா பெருந்தொற்றுக்கு முந்தைய சூழல் எட்டப்படுவதாக வெளியுறவு இணை அமைச்சர் முரளீதரன் கருத்து தெரிவித்துள்ளார்.



ஆனால் மத்திய வங்கியின் ஆளுநர் வளர்ச்சி இன்னும் தொற்றுநோய்க்கு முந்தைய அளவில் இல்லை என்றும், பொருளாதாரத்தில் மந்தநிலை காணப்படுவதாகவும், 2021-22 ஆம் ஆண்டின் மூன்றாம் காலாண்டில் மட்டுமே தொற்றுநோய்க்கு முந்தைய உற்பத்தி அளவை விட அதிகமாக இருக்கும் என்று கூறுகிறார்.




திட்டக் குழுவின் முன்னாள் துணைத் தலைவர் மாண்டேக் சிங் அலுவாலியா, 2019-20 ஆம் ஆண்டைப் போலவே 2021-22 ஆம் ஆண்டில் இந்தியாவின் மொத்த பொருளாக்க மதிப்பு எட்டு விழுக்காடு உயரும் என்று எதிர்பார்ப்பதாகக் கூறியுள்ளார். இந்திய தலைமை வங்கியால் கணிக்கப்பட்டுள்ள 9.5 விழுக்காடு மொத்த பொருளாக்க மதிப்பானது மிகைப்படுத்தப்பட்டதாக இருக்கலாம் ஏனென்றால் அமைப்புசார் துறையை விட, அமைப்புசாரா துறை மிகவும் மோசமாக செயல்படுகிறது என்ற உண்மையை அது சரியாக பிரதிபலிக்கவில்லை என்கிறார். பொருளாதாரம் அதிக வளர்ச்சிக்கு திரும்ப வேண்டுமானால், முதலீடுகளுக்கு புத்துயிர் பெறச்செய்வது இன்னும் முக்கியமானது எனவும் கூறியுள்ளார்.

ஒரு விழுக்காட்டிற்கும் குறைவான நிதித்தொகுப்பை 10 விழுக்காடு போல் ஊதிப் பெருக்கிக் காட்டிய நிதியமைச்சர் கூறுகிறார்: இந்தியாவில் நிதித்தூண்டுதலை முடிவுக்குக் கொண்டுவர அவசரமில்லை, ஆனால் அதிகரித்து வரும் கச்சா எண்ணெய் விலை மிகப்பெரிய சவாலாக உருவெடுத்து வருகிறது. நிச்சயமற்ற தன்மையால் பொருளாதாரத்தை மீட்சிப் பாதையில் கொண்டு வருவதற்கான சில திட்டங்களை பாதிக்கக்கூடும் என்று.

இந்தியாவை 5 டிரில்லியன்(5 லட்சம் கோடி) பொருளாதாரமாக வளர்த்தெடுப்போம் என பாஜக அரசு சவால் விட்டிருந்தது. ஆனால் அவர்களின் பொருளாதாரச் செயல்பாடுகள் உண்மையான பொருளாதாரத்தை வளர்க்கவில்லை, பங்குச்சந்தையில் ஊகமுதலீடுகளையே வளர்த்துள்ளது. கோல்ட்மேன் சாசே நிதி நிறுவனம் இந்தியாவின் பங்குச் சந்தை மூலதனம் 2024ல்



5 டிரில்லியன் டாலராக உயரும் என கணிப்பீடு செய்துள்ளது. இந்தியாவின் உண்மையான பொருளாதாரமும், உற்பத்தி நடவடிக்கைகளும் கடுமையாக பாதிக்கப்பட்டுள்ள நிலையில் இந்தியப் பங்குச் சந்தையின் சந்தை மூலதனம் இந்த ஆண்டு 37 விழுக்காடு உயர்ந்து $3.46 டிரில்லியனாக (லட்சம் கோடி) அதிகரித்துள்ளது என்று ப்ளூம்பெர்க் குறியீட்டு எண் தெரிவிக்கிறது. ஐக்கிய முடியரசின் பங்குச்சந்தை மதிப்பு 9 விழுக்காடு அதிகரித்து $3.59 டிரில்லியனாக உள்ளது. இந்தியப் பங்குச் சந்தையின் மதிப்பு, ஐக்கிய முடியரசின் பங்குச் சந்தை மதிப்பை நெருங்கியுள்ளது.

இந்தியாவின் தொழில்துறை, உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை தொலைத்தொடர்பு துறையில் 100 விழுக்காடு நேரடி அன்னிய முதலீட்டை (FDI) அனுமதித்துள்ளது. இதுவரை, இத்துறையில் 49 சதவீத அன்னிய நேரடி முதலீடு மட்டுமே அனுமதிக்கப்பட்டிருந்தது.

200 ஆண்டுகளுக்கு மேல் பழமையான ஆயுதத் தொழிற்சாலை வாரியத்தை (OFB) கலைத்து அதிலிருந்து ஏழு அரசு பாதுகாப்பு நிறுவனங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளன. ஆயுதத் தொழிற்சாலை வாரியத்தின் 41 ஆயுத தொழிற்சாலைகளின் சொத்துக்கள் ஏழு புதிய நிறுவனங்களுக்கு மாற்றப்பட்டுள்ளனவே தவிர புதிதாக எதையும் உருவாக்கவில்லை.

ராணுவ தளவாட ஏற்றுமதியில் முன்னணியில் உள்ள 25 நாடுகளின் பட்டியலில் இந்தியா இடம் பெற்றுள்ளதாகவும், விமானப்படை பாதுகாப்பு தளவாட ஏற்றுமதி மூலம் 2024-25க்குள் ரூ.35 ஆயிரம் கோடி ஏற்றுமதி செய்ய இலக்கு நிர்ணயிக்கப்பட்டுள்ளதாகவும் பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பெருமிதம் கொள்கிறார்.வளர்ந்த நாடுகள் மட்டுமே ராணுவதளவாட ஏற்றுமதியில் முன்னணியில் இருந்த நிலையில், இந்தியாவும் அதில் சேர்ந்துள்ளது. சமூக முன்னேற்றத்திற்கான துறைகளை புறந்தள்ளிவிட்டு பாதுகாப்புத்துறைக்கு அதீத முக்கியத்துவம் அளித்து இந்தியாவை இரண்டாவது இஸ்ரேலாக்கும் திட்டத்தையே நிறைவேற்றிவருகிறது பாஜக அரசு.

இந்த நிதியாண்டில் பாஜக அரசின் பங்கு விலக்க இலக்கான 1.75 லட்சம் கோடியில், பொதுத்துறை வங்கிகள், நிதி நிறுவனங்களில் உள்ள அரசு பங்குகளை விற்பதன் மூலம் ரூ.1 லட்சம் கோடியும், பொதுத்துறை நிறுவனங்களின் பங்குவிலக்கலின் மூலம் 75,000 கோடி ரூபாயும் திரட்டத் திட்டமிடப்பட்டுள்ளது.

தனியார்மயமாக்கப்படும் பொதுத்துறை நிறுவனங்களின் நிலம் மற்றும் பிற முக்கிய சொத்துக்களை பணமாக்குவதற்கு ஒரு நிறுவனத்தை அமைப்பதற்கான முயற்சியில் நிதி அமைச்சகம் ஈடுபட்டுள்ளது.

பொதுத் துறை நிறுவனங்களை தனியாருக்கு விற்கும் மத்திய அரசின் நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பு ஏற்பட்டுள்ளதற்கு பதிலளிக்கும் வகையில் முதன்மை பொருளாதார ஆலோசகர் சஞ்சீவ் சன்யால் கூறுகிறார்:அரசின் தனியார்மயமாக்கல் நடவடிக்கையை விமர்சிக்கும் எதிர்க்கட்சிகள், பொதுத்துறை நிறுவனங்கள் பல ஆண்டுகளின் கடும் முயற்சியில் பொது




TATA

மக்களின் வரிப்பணத்தில் கட்டி எழுப்பப்பட்டவை என்று கூறுகிறார்கள்.ஆனால் அரசின் தனியார்மயமாக்கல் பட்டியலில் உள்ள பெரும்பாலான பொதுத்துறை நிறுவனங்கள் ஒரு காலத்தில் தனியாரால் உருவாக்கப்பட்டவை தான் என்று.இத்தகைய அறிவார்ந்த விளக்கத்தை அளிக்கும் பொருளாதார ஆலோசகர்கள் நாட்டில் ஒரு குண்டூசியைக் கூட விட்டுவைக்காமல் அனைத்தையும் தனியாருக்குத் தாரை வார்ப்பதற்கே ஆலோசனை அளிப்பார்கள்.இவர்களைக் கொண்டு பொதுத்துறைகளை எவ்வாறு வளர்த்தெடுக்க முடியும்?.

பிரதமர் நரேந்திர மோடியின் பொருளாதார ஆலோசனைக் குழு (EAC-PM) மறுசீரமைக்கப்பட்டுள்ளது.7 பேரைக் கொண்ட இந்த ஆலோசனைக் குழுவில் இடம்பெற்றிருப்போர் கிரெடிட் சுசி கடன் தரமதிப்பீட்டு நிறுவனம், ஜேபி மார்கன் சர்வதேச நிதி நிறுவனம், உலகவங்கி ஆகியவற்றில் பணி புரிந்தோர், மொத்தத்தில் நவீன தாராளமயத்தின் ஆதரவாளர்களே உள்ளனர் எனும் போது சமூக நீதியை அடிப்படையாகக் கொண்ட பொருளாதாரக் கொள்கைகளுக்கான ஆலோசனை வழங்குவது என்ற பேச்சுக்கே இடமில்லாமல் போனது.

பொதுத்துறை விமான நிறுவமான ஏர் இந்தியாவின் 100 விழுக்காடு பங்குகளை டாடா குழுமத்திற்கு ரூ.18000 கோடி ரூபாய்க்கு விற்பனை விற்பனை செய்வதை உறுதி செய்யும் கடிதத்தை (LoI) அரசு வெளியிட்டது. இதில் டாடா குழுமம் 2700 கோடி ரூபாய் (15 விழுக்காடு) ரொக்கப் பணம் செலுத்தினால் போதும். 15300 கோடி ரூபாய் கடனை மக்களின்




வரிப்பணத்திலிருந்து மத்திய அரசு செலுத்தவுள்ளது. இதை எந்த விதத்தில் விற்பனை என்று கூறமுடியும். இந்திய அரசு டாடா நிறுவனத்திற்கு கிட்டத்தட்ட இலவசமாகவே ஏர் இந்தியா நிறுவனத்தை அளித்துள்ளது.

ஏர் இந்தியாவை விற்பனை செய்யும் முடிவு நமது உறுதிப்பாட்டையும், முக்கியத்துவத்தையும் காட்டுகிறது, இந்தியாவில் இன்று இருப்பது போல் உறுதியான அரசு ஒருபோதும் இருந்ததில்லை என பிரதமர் நரேந்திர மோடி இதில் பெருமிதம் கொள்வதை என்னவென்று வர்ணிப்பது!.

நிட்டி ஆயோக் நாட்டின் புவிசார் ஆற்றல் வரைபடத்தை வெளியிட்டுள்ளது, இதில் இந்தியாவின் அனைத்து ஆற்றல் மூலங்களின் தரவுகளும் இடம்பெற்றுள்ளன.மக்களுக்கு சொந்தமான எஞ்சியுள்ள இயற்கை வளங்களையும் தனியாருக்குத் தாரை வார்ப்பதற்கான முன்னோட்டமாகத் தான் இதைப் பார்க்க முடியும்.

உலகளவில் 43 ஓய்வூதியத்திட்டங்களை பகுப்பாய்வு செய்து மெர்சர் சிஎ்ஃப்ஏ நிறுவனம் வெளியிட்ட உலகளாவிய ஓய்வூதியக் குறியீட்டில் இந்தியா 40வது இடத்தில் உள்ளது. 2020ல் 45.7ஆக இருந்த இந்தியாவின் ஒட்டுமொத்தக் குறியீட்டு மதிப்பு 2021ல் 43.3ஆகக் குறைந்துள்ளது. இந்தியாவின் ஓய்வூதிய அமைப்பின் ஒட்டுமொத்த குறியீட்டு மதிப்பை மேம்படுத்துவதற்கான பின்வரும் வழிமுறைகளையும் மெர்சர் ஆய்வு அறிக்கை பரிந்துரைத்துள்ளது. அவை 1. வயதான ஏழைகளுக்கான குறைந்தபட்ச ஆதரவை அறிமுகப்படுத்துதல், 2.அமைப்புசாரா

தொழிலாள வர்க்கத்திற்கான ஓய்வூதிய அமைப்பை ஏற்படுத்தி விரிவுபடுத்துதல், 3.குறைந்தபட்ச அணுகல் வயதை அறிமுகப்படுத்துதல்.

இந்தியாவில் இந்திராகாந்தி தேசிய ஓய்வூதியத் திட்டத்தில் வறுமைக் கோட்டிற்கு கீழ் உள்ள மூத்தக் குடி மக்களின் சுயமதிப்பை அவமதிக்கும் வகையில் மாதம் வெறும் 500 ரூபாய் ஓய்வூதியம் வழங்கப்படுகிறது. வெறும் 500 ரூபாயை அளித்து அதை ஓய்வூதியம் என்பது அவமதிக்கும் செயல் தானே. ஒரு முதியவரின் குறைந்தபட்ச அத்தியாவசியத் தேவைகளை நிறைவு செய்ய 500 ரூபாய் எப்படி போதுமானதாக இருக்கும்?.

மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலைவாய்ப்புத் திட்டத்தில் 71 விழுக்காட்டினருக்கு ஊதியம் சரியான நேரத்தில் வழங்கப்படவில்லை என்றும் 14 விழுக்காட்டினருக்கு ஊதியம் வழங்குவதில் 30 நாட்களுக்கு மேல் தாமதம் ஏற்பட்டுள்ளதாக ஆய்வுசெய்யப்பட்டதில் தெரியவந்துள்ளது.

விவசாயிகளின் பயிர்களுக்கு காப்பீடு வழங்கும் பிரதமர் பைசல் பிமா யோஜனா திட்டத்தின் கீழ் கடந்த 2020-21ம் ஆண்டில் ரூ.9,570 கோடி மட்டுமே இழப்பீடு பெறப்பட்டுள்ளது எனத் தெரியவந்துள்ளது.இது கடந்த 2019-20ம் ஆண்டைவிட 60 சதவீதம் குறைவாகும்.

மத்திய அரசின் புள்ளிவிவரங்கள்படி, 2020-21ம் ஆண்டில் நாட்டில் 445 லட்சம் ஹெக்டேர் விவசாய நிலங்கள் 6.12 கோடி விவசாயிகளால் ரூ.ஒரு லட்சத்து 93 ஆயிரத்து 767 கோடிக்கு காப்பீடு செய்யப்பட்டது.இதில் இழப்பீடாக ரூ.9570 கோடி வழங்கப்பட்டுள்ளது. கரீப் பருவத்தில் ரூ.6,799 கோடியும், ராபி பருவத்தில் ரூ.2,792 கோடியும் இழப்பீடாக விவசாயிகளுக்கு வழங்கப்பட்டது. கடந்த ஆண்டில் விசாயிகள் தரப்பில் ரூ.1.93 லட்சம் கோடி காப்பீடாக காப்பீடு நிறுவனங்களுக்குச் செலுத்தப்பட்டுஅதில் ரூ.9,570 கோடி மட்டுமே இழப்பீடு வழங்கப்பட்டுள்ளது. ஏறக்குறைய ரூ.1.84 லட்சம் கோடி காப்பீடு நிறுவனங்களுக்கு லாபமாகச் சென்றுள்ளன.

ஏழை விவசாயிகளையும், விவசாயக்கூலிகளையும் புறக்கணிக்கும் பாஜக அரசின் புதுத் தாராளிய செயல்பாடுகளால் 2020ல் தற்கொலை செய்துகொள்ளும் விவசாயத் தொழிலாளர்களின் எண்ணிக்கை 18 விழுக்காடு அதிகரித்துள்ளது.

புதுத் தாராளியத்தின் பாகுபாடான தடையற்ற சர்வதேச வர்த்தகத்தால் ஏற்படும் பாதிப்பை உலக வர்த்தக அமைப்பின் தலைவரே ஒத்துக் கொள்கிறார் என்பது குறிப்பிடத்தக்கது.பணக்கார நாடுகளில் அளிக்கப்படும், பெரும் விவசாய மானியங்கள் உலகளாவிய வர்த்தகத்தை தொடர்ந்து சிதைத்து, ஏழை நாடுகளில் உள்ள விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும் விதத்தில் நியாயமற்ற போட்டியை உருவாக்குவதாக உலக வர்த்தக அமைப்பின் தலைவர் என்கோசி ஒகோன்ஜோ-

இவேலா தெரிவித்துள்ளார்.

2021ஆம் ஆண்டுக்கான உலக பட்டினிக் குறியீட்டில் 116 நாடுகளில் இந்தியா 101-வது இடத்துக்கு சரிந்துள்ளது. கடந்த 2020ஆம் ஆண்டு 107 நாடுகளுக்கான பட்டியலில், 94-வது இடத்தில் இருந்த இந்தியா, 116 நாடுகளுக்கான பட்டியலில் 2021ஆம் ஆண்டில் 101-வது இடத்துக்குப் பின்தங்கியுள்ளது.உலக பட்டினிக் குறியீட்டில் இந்தியாவின் அண்டை நாடுகளான நேபாளமும், வங்கதேசமும் 76-வது இடத்திலும், மியான்மர் 71-வது இடத்திலும், பாகிஸ்தான் 92-வது இடத்திலும் உள்ளன. உலக பட்டினிக் குறியீடு மிகைப்படுத்தப்பட்டது உலக பட்டினிக் குறியீட்டில் இந்தியாவைக் குறைந்த தரத்தில் காண்பிக்க வேண்டும் என்பதற்காக பாரபட்சமான முறையில் வெளியிட்டுள்ளன என மத்திய அரசு தெரிவித்துள்ளது.

தேசிய குடும்ப நலக் கணக்கெடுப்பு-IV இன் படி, நோஞ்சான் குழந்தைகளின் விகிதம் 14 மாநிலங்களில் அதிகரித்துள்ளது. அதற்கு முன் செய்யப்பட்ட நான்காவது கணக்கெடுப்பில் ஐந்து வயதிற்குட்பட்ட குழந்தைகளில் 38.4 விழுக்காட்டினர் உயரம் குறைவாகவும், 21 விழுக்காடு குழந்தைகள் எடை குறைவாகவும் இருந்துள்ளனர். 2014-15 ஆம் ஆண்டில், மதிய உணவுத் திட்டத்திற்கு 13, 215 கோடி ஒதுக்கப்பட்ட நிலையில் 2021-22ல் வெறும் ரூ 11,500 கோடியே ஒதுக்கப்பட்டுள்ளது(Financial express).

நடப்பு நிதியாண்டில், மார்ச் 2021 இன் இறுதியில் இருந்து வங்கிகளின் புதிய வைப்புத்தொகைகளின் வரவு 3.1 விழுக்காடு அதிகரித்துள்ளது, அதேசமயம் வங்கிக் கடன் வழங்குவதில் 0.3 விழுக்காடு சரிவு ஏற்பட்டுள்ளது.

மத்திய வங்கியின் தரவுகளின் படி ஐந்து மாத சரிவிற்கு பிறகு நாட்டின் ஒட்டுமொத்த வங்கிக் கடனில் (ரூ.108.97 லட்சம் கோடி) சிறு குறு நிறுவனங்களின் பங்கு ஜூன் மாதத்தில் 9.55 விழுக்காடாகவும், ஜூலையில் 10.07 விழுக்காடாகவும், ஆகஸ்டில் 10.19 விழுக்காடாகவும் பதிவாகியுள்ளது. குறு, சிறு தொழில் வணிக நிறுவனங்கள் பெறும் கடன் கடந்த ஆகஸ்ட் மாதத்துடன் ஒப்பிடும்போது 1.1 விழுக்காடு மட்டுமே அதிகரித்துள்ளது.ஜூலை மாதத்தில் 0.2 விழுக்காடு மட்டுமே அதிகரித்திருந்தது. ஏப்ரலில் -2.2 விழுக்காடாகவும், மே மாதத்தில் -3.6 விழுக்காடாகவும், ஜூன் மாதத்தில் -3.5 விழுக்காடாகவும் மூன்று மாதங்களுக்கு எதிர்மறையான கடன் வளர்ச்சியை பதிவு செய்யப்பட்டிருந்தன.

பெண்களால் நடத்தப்படும் 1.5 கோடி சிறு குறு நிறுவனங்களில் $15800 கோடி டாலர் நிதி இடைவெளி காணப்படுவதாகவும், பெண்களால் நடத்தப்படும் சிறு குறு நிறுவனங்களில் வாராக்கடன் 40 விழுக்காடு குறைவாக உள்ளதாகவும் சர்வதேச நிதி நிறுவனத்தைச் சேர்ந்த

கமர் சலீம் குறிப்பிட்டுள்ளார். பெண் சிறு குறு நிறுவனர்களில் 66 விழுக்காட்டினரிடம் வங்கிக் கணக்கு இல்லை என்பதையும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

நடுத்தர நிறுவனங்களுக்கான வங்கிக் கடன் வளர்ச்சி ஆகஸ்ட் மாதத்தில் 54.6 விழுக்காடாக உள்ளது, ஜூலையில் கடன் வளர்ச்சி 70.9 விழுக்காடாகவும், ஜூன் மாதத்தில் 63.2 விழுக்காடாகவும் இருந்துள்ளது.

விமானங்களுக்குப் பயன்படும் எரிபொருள் விலையைவிட வாகனங்களுக்குப் பயன்படுத்தும் எரிபொருள் விலை 30 விழுக்காடு உயர்ந்துவிட்டது. விமானங்களுக்குப் பயன்படுத்தும் ஏடிஎப் எரிபொருளின் விலை ஒரு லிட்டர் ரூ.79 . ஆனால், வாகனங்களுக்கான பெட்ரோல் விலை லிட்டருக்கு ரூ.110க்கு மேல் சென்றுவிட்டது.தங்கம், பிட்காயின் ஆகியவற்றின் மதிப்பும் அதிகரித்து வருகிறது.

உலக அளவில் பணவீக்கம் அதிகரித்துள்ளது.கச்சா எண்ணெய், நிலக்கரி, உலோகங்களின் விலை உயர்வால் வர்த்தகப்பற்றாக்குறை அதிகரிக்கும் போக்கு காணப்படுகிறது. செப்டம்பர் மாதத்தில் ஏற்றுமதி வளர்ச்சி பாதியாகக் குறைந்து 23 விழுக்காடாகவும், இறக்குமதி வளர்ச்சி கணிசமாக அதிகரித்து 85 விழுக்காடு உயர்ந்துள்ளது. சென்ற மாதத்தில் 13.3 பில்லியன் டாலராக இருந்த வர்த்தகப் பற்றாக்குறை செப்டம்பர் மாதத்தில் 22.59 பில்லியன் டாலராக உயர்ந்துள்ளது.

இந்தப் பணவீக்க அழுத்தத்தால் அண்மையில் ரூபாய் மதிப்பு வீழ்ச்சியடைந்தது.ரூபாய் மதிப்பு குறையும் போது அதிலிருந்து ஆதாயம் அடைவதற்காகவே “தேசப்பற்று” மிகுந்த பல பணக்கார இந்தியர்கள் டாலர் பங்குகளில் முதலீடு செய்கிறார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

பணவீக்கம்:

மொத்த விலை பணவீக்கம் செப்டம்பர் மாதத்தில் 10.66 விழுக்காடாக உயர்ந்துள்ளது, எரிபொருள், ஆற்றலின் விலைவாசி 24.81 விழுக்காடு உயர்ந்துள்ளது. செப்டம்பர் மாதத்தில் நுகர்வோர் குறியீடு அடிப்படையிலான சில்லறை பணவீக்கத்தின் அளவு 4.35 விழுக்காடு அதிகரித்துள்ளது, உணவுப் பொருட்களின் விலைவாசி 0.68 விழுக்காடு அதிகரித்துள்ளது. காய்கறிகளின் விலைவாசி 22.47 விழுக்காடு குறைந்துள்ளது. பழங்களின் விலைவாசி 3.70 விழுக்காடு உயர்ந்துள்ளது. பருப்பு வகைகளின் விலைவாசி 8.75 விழுக்காடு அதிகரித்துள்ளது. முட்டையின் விலை 7.06 விழுக்காடு உயர்ந்துள்ளது. எண்ணெய், கொழுப்பு ஆகியவற்றின் விலைவாசி 34.19 விழுக்காடு அதிகரித்துள்ளது. மீன்,இறைச்சியின் விலைவாசி 7.99 விழுக்காடு உயர்ந்துள்ளது.

**ஆகஸ்ட் மாதத்தில் தொழில்துறை வளர்ச்சி:**

புள்ளியியல் அமைச்சகத்தால் வெளியிடப்பட்ட தொழில்துறை உற்பத்திக் குறியீட்டு அறிக்கையின் படி ஆகஸ்ட் மாதத்தில் உற்பத்தி 11.9 விழுக்காடு உயர்ந்துள்ளது. முதன்மைத் துறைகளில் சுரங்கத் துறை, செய்பொருளாக்கத் துறை, மின்சாரத் துறை ஆகியவற்றில் உற்பத்தி முறையே 23.6, 9.7, 16.0 விழுக்காடு உயர்ந்துள்ளது. முதன்மை பொருட்கள், மூலதனப் பொருட்கள், இடைநிலைப் பொருட்கள், கட்டுமானப் பொருட்கள் ஆகியவற்றின் உற்பத்தி அளவுகள் முறையே 17.0, 19.9, 10.3, 11.1 விழுக்காடு உயர்ந்துள்ளன. உடனடி நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 5.2 விழுக்காடு அதிகரித்துள்ளது. நீடித்த நுகர்வுப் பொருட்களின் உற்பத்தி 8.0 விழுக்காடு அதிகரித்துள்ளது.

**செப்டம்பரில் தொழில்துறை வளர்ச்சி:**

இந்தியாவின் தொழில்துறை, உள்நாட்டு வர்த்தக மேம்பாட்டுத் துறை வெளியிட்ட எட்டு முக்கிய தொழில்களின் ஒருங்கிணைந்த உற்பத்திக்குறியீடு செப்டம்பரில் 4.4 விழுக்காடு அதிகரித்துள்ளது. சென்ற ஆண்டு செப்டம்பர் மாத உற்பத்தி அளவோடு ஒப்பிடும் போது நிலக்கரி உற்பத்தி 8.1 விழுக்காடு அதிகரித்துள்ளது. கச்சா எண்ணெய் உற்பத்தி 1.7 விழுக்காடு குறைந்துள்ளது, பெட்ரோலிய சுத்திகரிப்பு பொருட்களின் உற்பத்தி 6.0 விழுக்காடு அதிகரித்துள்ளது. உர உற்பத்தி 0.02 விழுக்காடு அதிகரித்துள்ளது. இயற்கை எரிவாயு உற்பத்தி 27.5 விழுக்காடும், உருக்கு உற்பத்தி 3.0 விழுக்காடும், சிமெண்ட் உற்பத்தி 10.8 விழுக்காடும், மின்சார உற்பத்தி 0.3 விழுக்காடும் அதிகரித்துள்ளது.

2020 ஏப்ரல்-செப்டம்பரில் ரூ.1.28 லட்சம் கோடியாக இருந்த பெட்ரோல் மீதான வரி வசூல் 2021 ஏப்ரல்-செப்டம்பரில் ரூ.1.71 லட்சம் கோடியாக உயர்ந்துள்ளது.ஏப்ரல்-செப்டம்பர் 2019ல் வசூலான ரூ.95,930 கோடியை விட 79 விழுக்காடு அதிகரித்துள்ளது.

இந்தியாவில் பணவீக்கத்தின் மேல் நோக்கிய போக்கைக் கட்டுப்படுத்த பெட்ரோலிய பொருட்கள் மீதான வரி குறைப்பு அவசியம்" என்று மத்திய வங்கி பணக் கொள்கைக்குழுவின் வெளி உறுப்பினர் ஆஷிமா கோயல் அறிவுறுத்தியுள்ளார்.

நுகர்வோரின் சுமையை குறைக்க, பெட்ரோல் விலையில் 54 விழுக்காடும், டீசலின் விலையில் 48 விழுக்காடும் உள்ள வரிகளை அரசாங்கம் குறைக்குமா என்ற கேள்வி பெட்ரோலியம், இயற்கை எரிவாயு துறை இணை அமைச்சர் ராமேஸ்வர் டெலியிடம் கேட்கப்பட்டது. அதற்கு அவர் கூறுகிறார்; விலைகள் உயர்கின்றன ஏன் வரியைக் குறைக்கக்கூடாது எனக் கேட்கும் போக்கு நம் காலை நாமே கோடரியால் வெட்டுவதைப்

போன்றதாகும். லிட்டருக்கு 32 ரூ கலால் வரியின் மூலமாகத் தான் 100 கோடி பேருக்கு தடுப்பூசி போடப்பட்டது, 90 கோடி மக்களுக்கு ஒரு வருடம் முழுவதும் (தொற்றுநோயின் போது) ஒரு நாளைக்கு 3 வேளை உணவு வழங்கப்பட்டது, உஜ்வாலா திட்டத்தில் 8)கோடி ஏழை பயனாளிகளுக்கு இலவச சமையல் எரிவாயுவும் அளிக்கப்பட்டது என 'நியாயம்' கற்பிக்கிறார்.

அமெரிக்க மத்திய வங்கி பணப்புழக்கத்தை அதிகரிக்கும் செயல்பாடுகளைக் நவம்பரில் இருந்து குறைக்கவுள்ளது. இந்திய மத்திய வங்கி 2020-21 நிதியாண்டில் வெளிச்சந்தை நடவடிக்கைகள் (OMO) மூலம் ரூ.3.1 லட்சம் கோடியை செலுத்தியது. நிதியாண்டு. 2021-22 ஆம் ஆண்டின் முதல் ஆறு மாதங்களில் 'ஜி-சேப்' உட்பட திறந்த சந்தை செயல்பாடுகள் மூலம் ரூ.2.37 டிரில்லியன் பணப்புழக்கத்தை ஏற்படுத்தியுள்ளது.

கருவூலப் பத்திரங்களின் வட்டி விகிதம் அதிகரித்துள்ளதால் மத்திய வங்கி 'ஜி-சாப்' எனப்படும் அரசுப் பத்திரங்களை வாங்கும் திட்டத்தை செயல்படுத்துவதை முடிவுக்குக் கொண்டுவந்தது. ஆனபோதும் மத்திய வங்கி திறந்த சந்தை செயல்பாடு (OMO), திருப்ப செயல்பாட்டையும் தொடரும் என்றும் தேவைப்பட்டால் 'ஜி-சாப்'திட்டம் மீண்டும் செயல்படுத்தப்படும் எனவும் தெரிவித்துள்ளது.

அது என்ன திறந்த சந்தை செயல்பாடு, திருப்ப செயல்பாடு?

ரூபாய் மதிப்பினை ஏற்ற இறக்கங்களிலிருந்து காத்திட மத்திய வங்கி திறந்தவங்கி செயல்பாட்டில் ஈடுபடுகிறது. மத்திய வங்கி திறந்த சந்தை செயல்பாடு (OMO) வழி மூலம் சந்தையில் இருந்து 17,000 கோடி ரூபாய்க்கு பத்திரங்களை வாங்கியுள்ளது. திருப்பச் செயல்பாட்டின் மூலம் குறுகிய கால கருவூலப் பத்திரங்களை விற்று நீண்ட கால கருவூலப் பத்திரங்களை வாங்குகிறது. திருப்பச் செயல்பாட்டின் மூலம் நீண்ட கால கருவூலப் பத்திரங்களின் வட்டிவிகிதம் குறைக்கப்படுகிறது.

இந்திய தலைமை வங்கியின் துணை ஆளுநர் ரபி ஷங்கர்.முழுமையாக மாற்றத்தக்க மூலதனக் கணக்கிற்கு வங்கிகள் தயாராக இருக்க வேண்டும் என்று அறிவுறுத்தியுள்ளார். உலக நிதிச் சந்தையுடன் முற்றிலுமாக இணையும் விதமாக இந்தியாவின் மூலதனக் கணக்கை விரைவில் முழுமையாக மாற்றத்தக்கதாக ஆக்கப்படவுள்ளது என்பதையே இது குறிப்பிடுகிறது. இதன் மூலம் இந்தியக் கடன் சந்தை வெளி நாட்டினருக்கு முழுமையாக அணுகக்கூடியதாக திறந்துவிடப்படும். அரசு-கருவூலப் பத்திரங்களிலும் வெளிநாட்டினர் அல்லது வெளிநாட்டு வாழ் இந்தியர்கள் முதலீட்டிற்கு அனுமதி அளிக்கப்படும். மூலதனக் கணக்கை மாற்றுவது அதனுடன் தொடர்புடைய சில அபாயங்கள் மற்றும் சவால்களைக் கொண்டுவரும், மேலும் சந்தை

பங்கேற்பாளர்கள், குறிப்பாக வங்கிகள், "வணிக செயல்முறை மாற்றங்கள், மூலதன மாற்றத்துடன் தொடர்புடைய உலகளாவிய அபாயங்களை நிர்வகிக்க தங்களைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டும்" என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

உலகளாவிய குறியீடுகளில் தேசத்தின் பத்திரங்களைச் சேர்க்கும் திசையில் அரசு நகர்கிறது என்று நிதி அமைச்சர் கூறியது இத்திட்டத்தை விரைவில் செயல்படுத்தவுள்ளனர் என்பதையே குறிக்கிறது.

வெளிநாட்டுக் கடன் இருப்பு அதிகரிப்பது தேசத்தின் இறையாண்மைக்கு ஆபத்தானது. இதனால் இந்தியாவின் நிதி நிலை திடீர் ஏற்ற இறக்கங்களுக்கு உட்படுத்தப்பட்டு நிலையற்றத் தன்மையை ஏற்படும் அபாயம் ஏற்படும்.இதனால் ரூபாயின் மதிப்பு கடுமையாக பாதிக்கப்படும் என்பதும் எச்சரிக்கைக்குரியது.

கோவிட்-19 தொற்றுநோய்க்கு மத்தியில், கிரிப்டோ நாணயங்களுக்கான சந்தை இந்தியாவில் அதிவேகமாக வளர்ந்து வருகிறது.உலகளவில் இந்தியா 10.06 கோடி கிரிப்டோ நாணய முதலீட்டாளர்களுடன் கிரிப்டோ நாணய சந்தையில் முதலிடத்தில் உள்ளது. 2020 மார்ச்சில் கிரிப்டோ நாணயங்களில் முதலீடு செய்வதற்கான தடை உச்சநீதிமன்ற தீர்ப்பால் நீக்கப்பட்டது. கிரிப்டோ நாணயம் அரசு தலையீடில்லாத மக்களுக்கான நாணயமாகவும், ஜனநாயக ஊடகமாகவும் கூட முன் நிறுத்தப்படுகிறது. ஆனால் உண்மை நிலவரம் அதற்கு நேர்மாறாக உள்ளது. தற்போது கிரிப்டோ நாணயங்களில் ஊக முதலீடுகளே மிகவும் அதிகரித்துவருகின்றன. பாலிவுட் திரைப்பட நாயகர்களைக் கொண்டு விளம்பரப்படுத்தும் முயற்சிகளும் அதிகரித்துள்ளன. இதை உடனடியாக ஒழுங்குபடுத்துவதற்கான முயற்சிகள் ஏற்படுத்தப்படவேண்டும்.

இந்தியாவில் மெர்செடெஸ் பென்ஸ், ஆடி, பிஎம்டபிள்யூ போன்ற சொகுசு கார்களின் விற்பனை 2021 ஜூலை-செப்டம்பர் காலாண்டில் அதிகரித்துள்ளது குறிப்பிடத்தக்கது.

இந்தியாவில் உழைப்புச் சுரண்டலை அதிகப்படுத்தும் விதத்தில் தொழிலாளர் சட்டங்கள் நிறைவேற்றப்படும் வேளையில் ஐஸ்லாந்தில் செய்யப்பட்ட ஒரு ஆய்வு நம் கவனத்திற்குரியதாக உள்ளது. 2,500 தொழிலாளர்கள் ஈடுபடுத்தப்பட்டு அவர்களின் வார வேலை நேரம் குறைக்கப்பட்டது. இந்த சோதனையின் முடிவில் தொழிலாளர்கள் குறைந்த நேரத்தில் அதே ஊதியத்துடன் உற்பத்தித்திறனை பராமரிக்கவும், தனிப்பட்ட நல்வாழ்வை மேம்படுத்தவும் முடியும் எனக் கண்டறியப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

அமெரிக்காவைச் சேர்ந்த டேவிட் கார்ட் (David Card), ஜோஸ்வா D. அங்ரிஸ்ட் (Joshua D.

Angrist) மற்றும் கொய்டோ இம்பென்ஸ் (Guido W. Imbens) ஆகிய மூன்று பொருளாதார வல்லுனர்களுக்கு 2021ஆம் ஆண்டுக்கான பொருளாதாரத்திற்கான நோபல் பரிசு எனக் கருதப்படும் ஸ்வெரிஜெஸ் ரிக்ஸ்பேங்க் பரிசு பகிர்ந்தளிக்கப்பட்டது. அவர்காளது ஆய்வில் குறைந்தபட்ச ஊதியத்தை அதிகரிப்பது குறைவான வேலைவாய்ப்புக்கு வழிவகுக்காது என்றும், புலம்பெயர்ந்தோரால் பூர்வீகமாக குடியிருக்கும் தொழிலாளர்களின் ஊதியம் குறைக்கப்படுவதில்லை என்றும் கண்டறியப்பட்டுள்ளது. ஒரு நாட்டில் பிறந்தவர்களின் வருவாய் புதிதாக குடியேறியவர்களால் பயனடையலாம் என்றும், அதே சமயம் முன்னதாக குடியேறியவர்கள் அதனால் எதிர்மறையாக பாதிக்கப்படும் அபாயத்தில் உள்ளனர் என்றும் ஆய்வுகளின் முடிவில் கண்டறியப்பட்டுள்ளது.

ஜி 20 கூட்டமைப்பில் 136 நாடுகளின் ஆதரவுடன் 15 விழுக்காடு உலகளாவிய குறைந்தபட்ச கார்ப்பரேட் வரியை நடைமுறைப்படுத்த ஒப்புதல் அளிக்கப்பட்டது.வரி புகலிடங்கள் என்று அழைக்கப்படும் - குறைந்த கார்ப்பரேட் வரி உள்ள நாடுகளில் பன்னாட்டு நிறுவனங்கள் லாபத்தைத் பதுக்குவதைத் தடுப்பதையே இது நோக்கமாகக் கொண்டுள்ளது.15 விழுக்காடு என்பது மிகவும் குறைவு என்பதால் இதன் மூலம் பன்னாட்டு நிறுவனங்களின் வரி ஏய்ப்பு நடவடிக்கைகளை முற்றிலுமாகத் தவிர்க்க முடியாது என பொருளாதார வல்லுனர்கள் கருத்து தெரிவித்துள்ளனர்.

ஜி-20 நாடுகளின் தலைவர்கள் காலநிலை மாநாட்டில் புவி வெப்பமடைதலை 1.5 டிகிரி செல்சியஸுக்குள் கட்டுப்படுத்துவதற்கான இறுதி அறிக்கைக்கு ஒப்புதல் வழங்கியுள்ளனர். ஜி-20 கூட்டமைப்பில் உள்ள பிரேசில், சீனா, இந்தியா, ஜெர்மனி, அமெரிக்கா போன்ற நாடுகள் உலகளாவிய பசுங்குடில் வாயு உமிழ்வு 80 விழுக்காட்டை உமிழ்வதாக மதிப்பிடப்பட்டுள்ளது. இயற்கைப் பேரழிவுகளால் இந்தியாவுக்கு 2020-ல் மட்டும் ரூ.65.33 லட்சம் கோடி இழப்பு ஏற்படுவதாக உலக வானிலை அமைப்பு தகவல் அளித்துள்ளது.

வளரும் சமூகங்களின் ஆய்வு மையத்தைச் (CSDS) சேர்ந்த மஞ்சேஷ் ராணா 'இந்தியன் எக்ஸ்பிரஸ்' நாளேட்டுக்கு எழுதியக் கட்டுரையில் சொத்திருப்புகளின் அடிப்படையில் இந்திய குடும்பங்களின் செழிப்பு நிலையை பகுப்பாய்வு செய்ததை விவரித்துள்ளார். மகிழுந்து, அறைக் குளிரூட்டு, தொலைக்காட்சி, குளிர்சாதனப் பெட்டி, கணினி/மடிக் கணினி போன்ற உடைமைகளை செழுமைக்கான குறியீடுகளாக பயன்படுத்தியதில், 33 இந்திய குடும்பங்களில் ஒன்று மட்டுமே (வெறும் 3%) ஐந்து உடைமைகளையும் சொந்தமாகக் கொண்டுள்ளது எனக் கண்டறியப்பட்டுள்ளது.

பட்டியலின சாதி (SC) குடும்பங்களுடன் ஒப்பிடும்போது பொதுப்பிரிவைச் சேர்ந்த இந்து குடும்பங்கள் ஐந்து உடைமைகளையும் ஏழு மடங்கு அதிகமாக வைத்திருக்கும் நிலை காணப்படுகிறது. ஆயிரத்தில் மூன்று பட்டியலின பழங்குடி குடும்பங்கள் மட்டுமே இவற்றை உடைமையாகக் கொண்டுள்ளன. பொதுப்பிரிவு இந்துக் குடும்பங்களில் ஐந்தில் ஒரு குடும்பமும், பட்டியலின சாதி குடும்பங்களில் இருபதில் ஒரு குடும்பமும் மகிழுந்து வைத்துள்ளன. சீக்கியர்கள் மற்ற சமூகங்களை விட செழிப்புடையவர்களாகவும், முஸ்லீம் சமூகம் மற்ற சமூகங்களை விட செழிப்பு குறைந்தும் காணப்படுவது தெரியவந்துள்ளது. 2014ல் நூறில் இரண்டு முஸ்லீம் குடும்பங்கள் ஐந்து சொத்துக்களையும் சொந்தமாக வைத்திருந்தாலும், 2019ல், நூறில் ஒரு குடும்பம் மட்டுமே மேல் குறிப்பிட்ட ஐந்து உடைமைகளையும் கொண்டிருக்கும் நிலை ஏற்பட்டுள்ளது.

முதல் 20 விழுக்காட்டில் உள்ள 93 விழுக்காடு குடும்பங்கள் முறையான சுகாதார வசதியைப் பெற்றுள்ளனர். கீழே உள்ள 20 விழுக்காடு குடும்பங்களில் 6 விழுக்காட்டினர் மட்டுமே சுகாதார வசதியைப் பெற்றுள்ளனர், மேலும் பாதுகாப்பான பிரசவ சேவைகளை பெறுவதில் ஏழைகளுக்கும், முதல் 20 விழுக்காடு பணக்காரர்களுக்கும் இடையே 35 விழுக்காடு இடைவெளி உள்ளது. இந்த ஆய்வின் முடிவுகள் சொத்து இருப்புகளில் இடைவெளியும், படி நிலைகளும் வேரூன்றிய ஏற்றத்தாழ்வை சுட்டிக் காட்டுகின்றன. சொத்துவரியை நடைமுறைப்படுத்துவதன் மூலமே இந்த இடைவெளியைக் குறைக்கமுடியும்.

அமெரிக்காவில் சொத்துவரியை அதிகரிப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. அமெரிக்க செனட் நிதிக் குழுவின் தலைவர் ரான் வைடன், அமெரிக்காவின் பெரும்பணக்காரர்களின் மீது மூலதன ஆதாயவரி விதிப்பதற்கான திட்டத்தை வெளியிட்டுள்ளார். 100 கோடி டாலர் நிகர மதிப்பு சொத்துடையவர்கள் அல்லது 10 கோடி டாலர் ஆண்டு வருவாய் பெறுபவர்களின் மீது இவ்வரி விதிக்கப்படும்.அமேசான் நிறுவனர் ஜெ◌ஃப் பெசோஸ், டெஸ்லா நிறுவனர் எலோன் மஸ்க் டெமோக்ராட்ஸ் உட்பட 700 பேர் இவ்வரியை செலுத்தும் கடப்பாடுடையவராவர்.

முதலாளித்துவ தலைமை நாடான அமெரிக்கா மூலதனத்தின் மீது வரி விதிக்கவுள்ள நிலையில் உலகின் மிகப்பெரிய ‘ஜனநாயக’ நாடாக அழைக்கப்படும் இந்தியாவில் பொருளாதார ஏற்றத்தாழ்வின்மையைக் குறைக்கும் விதமாக கார்ப்பரேட் வரியை அதிகரிப்பது, மூலதனம், சொத்தின்மீது வரி விதிப்பது என்ற பேச்சுக்கே இடமளிக்காத புதுத் தாராளிய அடிவருடியாகவும், தனியார்துறையின் பாதுகாவலனாகவும் பாஜக அரசு உள்ளது.

# மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு (GDP):

சமந்தா




ஒரு சமூகம் உயிர்த்திருக்கவும், தன்னை நிலை நிறுத்திக் கொள்ளவும் தினசரி பல்வேறு விதமான நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றது. ஒரு நாட்டில் விவசாயம், கால்நடை வளர்ப்பு, சிறுதொழில், குடிசைத் தொழில், சுரங்கத் தொழில், தொழிற்சாலைகளில் தளவாடங்கள், எந்திர பாகங்களை உற்பத்தி செய்தல் என பல்வேறு விதமான பொருளாதார நடவடிக்கைகள் மேற்கொள்ளப் படுகின்றன.இந்த பொருளாதார நடவடிக்கைகளை உற்பத்தி நடவடிக்கைகள் என்றும் மறுவுற்பத்தி நடவடிக்கைகள் என்றும் குறிப்பிடலாம்.

ஒரு சமூகம் உற்பத்தி செயல்பாடுகளை மீண்டும் தொடர்வதற்குத் தேவையான பொருளாயத நிலைகளையும், உற்பத்திஉறவுகளையும் தொடர்ந்து உருவாக்குவதே மறுவுற்பத்தி என அழைக்கப்படுகிறது.பொருளாயத நிலைகள் என்பது விவசாயம் தொழில்துறைக்கு தேவையான மூலப்பொருட்கள், உற்பத்தி சாதனங்களான எந்திரங்கள், உபகரணங்கள் ஆகியவற்றைக் குறிப்பிடுகிறது. உற்பத்தி உறவுகள் என்பது சமூக உற்பத்தியில் ஈடுபடும் போது சமூகத்தின் உறுப்பினர்களுக்கிடையே காணப்படும் சமூக, பொருளாதார உறவுகளைக் குறிப்பிடுகிறது. உற்பத்தியாளர்களுக்கும், உற்பத்திசாதனங்களின் உடைமையாளர்களுக்கும்




இடையிலான உறவு. உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், சேவைகளை விநியோகிக்கும் (பங்களிக்கப்படும்) போது சமூகத்தின் வெவ்வேறு தரப்பினர் அதில் எவ்வளவு பங்கை பெறுகின்றனர் என்பதையும் உற்பத்தி உறவுகளே நிர்ணயிக்கிறது. முதலாளித்துவ சமூகத்தில் உற்பத்தி சாதனங்களின் உடைமையாளராக முதலாளி வர்க்கம் உள்ளது. உற்பத்தி சாதனம் இல்லாததாக உழைக்கும் வர்க்கம் உள்ளது. ஆனால் உழைக்கும் வர்க்கமே உற்பத்தியில் நேரடியாக ஈடுபடுகிறது. உழைப்பாளர்கள் தன் உழைப்பிற்கான முழு ஊதியத்தையும் பெறுவதில்லை. உழைப்பாளர்களின் வேலை நேரத்தில் உழைப்புச்சக்தியை ஈட்டுவதற்கான நேரம் போக எஞ்சிய நேரத்தில் செய்யப்படும் ஊதியமற்ற உழைப்பையும் அதன் மூலம் உருவாக்கப்படும் சரக்குகளையும் முதலாளி வர்க்கத்தால் தனதாக்கப்படுகிறது.இதுவே உழைப்புச்சுரண்டல் எனப்படுகிறது. உழைப்புச் சக்தியை மீட்பதற்கு அவசியமான பொருட்கள்/ சேவைகளை வாங்குவதற்குத் தேவையான பணமே கூலி எனப்படுகிறது. ஒரு சமூகத்தில் உழைப்பின் மூலமே புதியமதிப்பு உருவாக்கப்படுகிறது.சமூகத்தின் மொத்த உற்பத்திப் பொருட்களும், வருவாயும் சமூகத்தின் அங்கத்தினரிடம் பகிர்ந்தளிக்கப்படுகிறது. உழைப்பில் ஈடுபட்டவர்கள் மட்டுமே வருவாய் பெறுவதில்லை. முதலாளித்துவத்தைப் போன்ற வர்க்க சமூகத்தில் உழைப்புச் சுரண்டல் நிகழ்வதால் உழைக்கும் வர்க்கம் அவர்களின் உழைப்பின்

மதிப்பை விட குறைவாகவே ஊதியம் பெறுகின்றனர். அவர்களால் உருவாக்கப்பட்ட உபரி மதிப்பு லாபமாகவும், வட்டியாகவும், வாடகையாகவும் முதலாளிகளுக்கும், நிதி முதலாளிகளுக்கும், நிலவுரிமையாளர்களுக்கும் பகிர்ந்தளிக்கப்படுகிறது.

ஒரு சமூகத்தில் பொருட்களும், சேவைகளும் ஏற்கெனவே இருந்த அளவிற்கே மீண்டும் உற்பத்தி செய்யப்படுமானால் அது எளிய மறுவுற்பத்தி எனப்படுகிறது. எளிய மறுவுற்பத்தியில் ஏற்கெனவே இருந்த அளவிலே பொருளாதாரம் நிலைநிறுத்தப்படுவதால் அது பொருளாதார வளர்ச்சியைக் குறிக்காது. சமூகத்தில் பொருட்களும், சேவைகளும் ஏற்கெனவே இருந்த அளவைக் காட்டிலும் அதிகமாக உற்பத்தி செய்யப்பட்டு விரிவாக்கம் செய்யப்படுமானால் அது விரிவாக்கப்பட்ட மறுவுற்பத்தி எனப்படுகிறது.அது பொருளாதார வளர்ச்சியைக் குறிக்கிறது. ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தித் திறன் வளர வளர உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், சேவைகளின் அளவும் அதிகரிக்கிறது.

பொருளாதார வளர்ச்சியை கணக்கிடுவதற்குப் பல்வேறுக் குறியீடுகள் உள்ளன. ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பில் ஏற்படும் வளர்ச்சியே பொதுவாக பொருளாதார வளர்ச்சியாக கருதப்படுகிறது.

ஒரு நாட்டில் ஓராண்டு காலத்தில் உள்நாட்டில் தயாரிக்கப்படும் பொருட்கள், சேவைகள் அனைத்தையும் கணக்கிடுவதன் மூலம் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு அளவிடப்படுகிறது.

ஒரு நாட்டில் பொருளாதார நடவடிக்கைகளை மேற்கொள்ளும் முகமைகளாக தொழிற்சாலை, அரசு நிறுவனம், வங்கித்துறை என பல்வேறு அலகுகள் செயல்படுகின்றன. அரசமைப்பைச் சார்ந்த பொதுத்துறை அமைப்புகள், நிறுவனங்களும், தனியார் துறையைச் சார்ந்த பல்வேறு நிறுவனங்களும் உற்பத்தி நடவடிக்கைகளை மேற்கொள்கின்றன.

அரசு நேர்முக வரி, சுற்றடி வரி மூலம் பெறும் வருவாயை சமூகத்தில் மறுவிநியோகம் செய்கிறது, நிறுவனங்களுக்கு மானியம் அளிக்கிறது. குடிமக்களுக்கு சமூகத்திட்டங்களின் மூலம் சேவைகளை வழங்குகிறது. சுகாதாரம், பாதுகாப்பு சேவைகளை அளிக்கிறது. அவை சாதாரணமாக விற்பனை செய்யப்படுவதில்லை; மாறாக அவை குடிமக்களால் கூட்டாக நுகரப்படுகின்றன அரசின் வரி வருவாயிலிருந்து இதற்கான நிதி பெறப்படுகிறது. அரசின் வரி வருவாயிலிருந்து நிறுவனங்களுக்கு மானியத்தொகை அளிக்கப்படுகிறது. கல்வி உதவித்தொகை, வேலையின்மைக்கான உதவித்தொகை, முதியோர் ஓய்வூதியம் ஆகியவையும்

அரசின் வருவாயிலிருந்து அளிக்கப்படுகிறது.

ஒரு தேசத்தின் பொருளாதாரம் உற்பத்தியாளர்கள், நுகர்வோர் போன்ற பல்வேறு தரப்பினரின் பொருளாதார நடவடிக்கைகளின் உதவியுடன் இயங்குகிறது. ஒரு நுகர்வோர் ஒரு கடையில் விற்பனையாளரிடம் 1 கிலோ அரிசியை வாங்குகிறார் என வைத்துக் கொள்வோம். அப்போது சரக்கான அரிசி விற்பனையாளரிடமிருந்து நுகர்வோருக்கு கைமாறுகிறது. சரக்குகள் உற்பத்தியாளரிடமிருந்து, விற்பனையாளருக்கும், அதன் பிறகு விற்பனையாளரிடமிருந்து நுகர்வோருக்கும் கைமாறும் போது, பணம் விற்பனையாளரிடமிருந்து உற்பத்தியாளருக்கும், நுகர்வோரிடமிருந்து விற்பனையாளருக்கும் கைமாறுகிறது. சரக்குகளின் ஓட்டத்திற்கு எதிர்த் திசையில் பணத்தின் ஓட்டம் உள்ளது.எளிதாக புரிந்து கொள்வதற்காக இவ்வாறு கூறலாம்; தொழிற்சாலையிலிருந்து வீடுகளை நோக்கி சரக்குகளின் ஓட்டம் உள்ளது. வீடுகளிலிருந்து தொழிற்சாலைகளை நோக்கி பணத்தின் ஓட்டம் உள்ளது. ஒரு நாட்டின் பல்வேறு முனைகளில் நடைபெறும் இந்தச் சரக்குகளின் ஓட்டத்தை அளவிட்டுத் தொகுப்பதன் மூலம் ஒரு நாட்டின் மொத்தப் பொருளாக்க மதிப்பு கணக்கிடப்படுகிறது, பல்வேறு முனைகளில் நடைபெறும் பணத்தின் ஓட்டத்தை அளவிட்டு தொகுப்பதன் மூலம் ஒரு நாட்டின் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

உற்பத்தியின் போது மூலப்பொருட்கள்/உள்ளீட்டுப் பொருட்களின் மதிப்புடன் உழைப்பின் மூலம் புதிய மதிப்பு கூட்டப்படுகிறது.இதுவே மதிப்புக் கூட்டல் எனப்படுகிறது. உற்பத்தி செய்யப்படும் பொருளில் தொழிலாளரால் சேர்க்கப்படும் புதிய உழைப்பின் மதிப்பும், எந்திரங்களின் மூலம் சேர்க்கப்படும் பழைய இறுகிய உழைப்பின் மதிப்பும் அதனுடன் சேர்க்கப்படுகிறது.ஒரு நாட்டில் ஒரு வருடத்தில் மேற்கொள்ளப்பட்ட பொருளாதார நடவடிக்கைகளின் போது சேர்க்கப்பட்ட மொத்த மதிப்புக் கூட்டலின் அளவைக் கணக்கிடுவதன் மூலம் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு அளவிடப்படுகிறது.

ஒரு நாட்டில் மொத்தமாக உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களும், சேவைகளும் விற்பனை செய்யப்படும் போது பெறப்படும் வருவாய் பல்வேறு தரப்பினருக்கும் விநியோகிக்கப்படுகிறது. தொழிலாளர்கள் கூலியைப் பெறுகின்றனர். நில சொந்தக்காரர், நில வாடகையைப் பெறுகிறார், முதலாளி லாபம் பெறுகிறார், கடன் அளித்தவர் வட்டி பெறுகிறார். இந்த பல்வேறு தரப்பினரும் பெறும் வருவாய்களின் கூட்டுத்தொகையைக் கணக்கிடுவதன் மூலமும் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பை அளவிடமுடியும்.

நாட்டின் குடிமக்கள் தாங்கள் பெற்ற வருவாயை தினசரி நுகர்வுக்காகவும், புதிய

முதலீடுகளுக்காகவும் செலவிடுகின்றனர்.தொழிலாளர் தான் பெற்ற கூலியை தன் குடும்பத்திற்குத் தேவையான உணவுக்காகவும், வீட்டு வாடகைக்காகவும், இதர அத்தியாவசியப் பொருட்கள் சேவைகளுக்காகவும் செலவிடுகிறார். முதலாளி, தன் லாபத்தின் ஒரு பகுதியை தினசரி நுகர்வுக்குத் தேவையான அத்தியாவசிய பொருட்கள், சேவைகள், ஆடம்பரப் பொருட்களுக்காக செலவிடுகிறார். லாபத்தின் மற்றொரு பகுதியை தொழில் நடவடிக்கைகளைத் தொடரவும், விரிவுபடுத்தவும் தேவையான முதலீடுகளை செய்வதற்காகவும் செலவிடுகிறார், லாபத்தின் இன்னொரு பகுதியை வருங்கால செலவுகளுக்காவும், முதலீடுகளுக்கான மூலதனத்தைத் திரட்டுவதற்காகவும் சேமிக்கிறார். ஒரு நாட்டின் பல்வேறு தரப்பினரும் மேற்கொள்ளும் மொத்த செலவுகளின் கூட்டுத் தொகையைக் கணக்கிடுவதன் மூலமும் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பைக் கணக்கிட முடியும்.

ஆகவே மூன்றுமுறைகளில் ஒரு நாட்டின் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பை அளவிட முடியும்.ஒரு பொருளாதாரத்தில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்கள், சேவைகளில் சேர்க்கப்பட்ட புதிய மதிப்புக் கூட்டலை அளவிடும் உற்பத்தி முறையின் மூலமும், நாட்டின் குடிமக்களின் மொத்த வருவாயைக் கணக்கிடும் வருவாய் முறையின் மூலமும், நாட்டின் பல்வேறு தரப்பினரும் மேற்கொள்ளும் மொத்த செலவுகளை அளவிட்டு ஒரு நாட்டின் மொத்தப் பொருளாக்க மதிப்பைக் கணக்கிட முடியும். ஆகவே உற்பத்தி முறை, வருவாய் முறை, செலவீட்டுமுறை என மூன்று முறைகளின் மூலமும் ஒரு நாட்டின் உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பையும், தேசியவருவாயையும் கணக்கிடமுடியும்.

ஒரு நாட்டின் பொருளாதாரம் தனக்குள் மட்டும் பரிவர்த்தனை செய்து கொள்ளும் மூடிய அமைப்பாக இருப்பதில்லை, வெளிநாடுகளுடனும் பரிவர்த்தனைகளில் ஈடுபடுகிறது.ஒரு நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் முழுவதும் அந்த நாட்டிலே நுகரப்படவேண்டும் என்ற அவசியமில்லை. உற்பத்திப் பொருட்களில் ஒரு பகுதி பிற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படலாம்.அதன் மூலம் அந்நாடு ஏற்றுமதி வருவாயைப் பெறும்.அதே போல் தங்கள் நாட்டில் உற்பத்தி செய்யப்பட்ட பொருட்களை மட்டும் தான் குடிமக்கள் வாங்க வேண்டும் என்ற அவசியம் இல்லை.வெளிநாடுகளிலிருந்து பொருட்களும் சேவைகளும் இறக்குமதி செய்யப்பட்டு நிறுவனங்களாலும், இல்லங்களாலும் பயன்படுத்தப்படலாம்.

பொருளாதாரம் சர்வதேசத் தொடர்புகளுடன் திறந்த அமைப்பாக இருப்பதால் ஒரு நாடு உள்நாட்டு நிறுவனங்களில் இருந்து மட்டும் வருவாய் பெறுவதில்லை. அந்நாட்டின் குடிமக்கள்

தற்காலிகமாக, ஒரு வருடம் வரை பணி நிமித்தம் வெளிநாடு சென்று பெறும் வருவாயும் தேசிய வருவாய் கணக்கில் சேர்க்கப்படும்.வெளிநாடுகளிலிருந்து பணி நிமித்தமாக நம் நாட்டில் வேலை செய்பவர்கள் பெறும் வருவாய் வெளி நாட்டு வருவாய் கணக்கில் சேர்க்கப்படும். இவை இரண்டுக்கும் இடையிலான வேறுபாடே வெளி நாட்டிலிருந்து பெறும் நிகர வருவாயாக கணக்கிடப்படும்.வெளிநாட்டிலிருந்து பெறும் வருவாய் அதிகமாக இருக்கும் போது இதன் மதிப்பு நேர்நிறையாகவும், நம் நாட்டிலிருந்து வெளி நாட்டுக்கு அளிக்கும் வருவாய் அதிகமாக இருக்கும் போது எதிர்மறையாகவும் இருக்கும்.

ஒரு நாட்டில் குடும்பங்களும், தனியாட்களும் தங்கள் வருவாய் முழுவதும் நுகர்வுச் செலவிற்கு முழுமையாகப் பயன்படுத்த வேண்டும் என்று அவசியமில்லை. அதில் ஒரு பகுதி வங்கிகளில் சேமிக்கப்படலாம். குடும்பங்கள், நிறுவனங்களின் உபரி பணம் வங்கிகள், நிதி நிறுவனங்களில் சேமிக்கப்படுகிறது. பங்குச்சந்தைகளில் முதலீடு செய்யப்படுகிறது. ஒரு நாட்டின் சேமிப்புகள் முதலீடுகளுக்கு நிதியளிக்கப் பயன்படுத்தப்படுகிறது.

வெளிநாடுகளிலிருந்து பெறும் மூலதனத்தைக் கொண்டும் ஒரு நாட்டில் முதலீடுகள் செய்யப்படலாம். வெளிநாடுகளிலிருந்து பெறும் நிகர மூலதன வரவு நேர்நிறையாகவோ, எதிர்மறையாகவோ இருக்கலாம். உலகின் பிற நாடுகளில் இருந்து கடன் வாங்குவது அதிகமாக இருக்கும் போது இதன் மதிப்பு நேர்நிறையாகவும், உலகின் பிற பகுதிகளுக்கு கடன் வழங்குவது அவற்றிடம் கடன் வாங்குவதை விட அதிகமாக இருக்கும் போது எதிர்மறையாகவும் இருக்கும்.

பொருளாதாரத்திற்குள்ளும், வெளி நாட்டிலிருந்தும் பெறப்படும் சேமிப்புகளை உள்நாட்டின் மூலதன உருவாக்கத்திற்குத் தான் பயன்படுத்தவேண்டும் என்ற அவசியம் இல்லை, அதை வெளி நாடுகளில் முதலீடு செய்வதற்கும் பயன்படுத்தலாம். வெளிநாட்டு நிகர முதலீட்டின் மதிப்பு நேர்மறையாகவோ எதிர்மறையாகவோ இருக்கலாம். வெளி நாட்டில் முதலீடு செய்யப்படும் மூலதனத்தின் அளவு, வெளிநாட்டால் உள்நாட்டில் செய்யப்படும் மூலதனத்தை விட அதிகமாக இருக்கும் போது இதன் மதிப்பு நேர்மறையாகவும், வெளிநாட்டில் முதலீடு செய்யப்படும் மூலதனத்தின் மதிப்பு, வெளிநாட்டால் உள்நாட்டில் செய்யப்படும் மூலதனத்தை விட குறைவாக இருக்கும் போது எதிர்மறையாகவும் இருக்கும்.

வெளிநாட்டிலிருந்து நம் நாட்டிற்கும் பணம் அனுப்பப்படலாம்.இது ஒரு தலைப்பட்சமான பண மாற்றம் எனக் குறிப்பிடப்படுகிறது. அதே போல் நம் நாட்டிலிருந்தும் பிற நாடுகளுக்கு ஒரு தலைப்பட்சமாக பணம் அனுப்பப்படலாம். இவை இரண்டுக்கும் இடையிலான வேறுபாடு உலகின் பிறபகுதிகளிலிருந்து பெறும் நிகர பணமாற்றல் எனப்படுகிறது.

ஒரு நாட்டின் மொத்தப் பொருளாக்க மதிப்பும், தேசிய வருவாயும் எவ்வாறு கணக்கிடப்படுகிறது என்பதைப் புரிந்து கொள்ள இவை அனைத்தையும் கருத்தில் கொள்ள வேண்டியது அவசியம்.

ஒரு நாட்டில் உற்பத்தி, மறுவுற்பத்தி ஆகியவை தொடர் செயல்முறையாக உள்ளன. உற்பத்தி செயல்பாடுகளிலிருந்து வருவாய் பெறப்படுகிறது, வருவாயிலிருந்து செலவு செய்யப்படுகிறது. செலவுகளின் ஓட்டம் மீண்டும் உற்பத்தி ஓட்டத்தை உருவாக்குகிறது. உற்பத்தி, வருவாய், செலவு ஆகியவை ஒன்றிணைந்த இந்த பொருளாதார சுழற்சி மீண்டும் மீண்டும் தொடரும் செயல்முறையாகிறது. ஒரு நாட்டின் உற்பத்தி, வருவாய், செலவு ஓட்டங்களை அளவிடுவது தேசிய வருவாயை அளவிடுவதற்கான மூன்று முறைகளை அளிக்கின்றன.

ஒரு பொருளாதாரத்தின் தேசிய வருவாயை அளவிட மூன்று முறைகள் உள்ளன. அவை:

1) உற்பத்தி முறை அல்லது மதிப்பு கூட்டப்பட்ட முறை,
2) வருவாய் முறை, மற்றும்
3) செலவு முறை.

தேவையான முழு புள்ளிவிவரங்களும் கிடைக்குமானால் இந்த மூன்று முறைகளின் மூலம் அளவிடப்படும் போதும் தேசிய வருவாயின் மதிப்பு ஒரே அளவாக இருக்கும். ஆனால் உண்மையில் அனைத்து தரவுகளும் கிடைக்காமல் போவதால் இந்த மூன்று முறைகளையும் கலந்து பயன்படுத்த வேண்டிய அவசியம் ஏற்படுகிறது.

ஒரு பொருளாதாரத்தின் தேசிய வருவாயை அளவிடுவதற்கான முதல் படி பொருளாதாரத்தை பல்வேறு தொழில் வகைகளாக பிரிப்பதாகும். ஒரு தேசத்தின் பொருளாதாரம் விவசாயம், சுரங்கம், மரம் வெட்டுதல், உற்பத்தி, கட்டுமானம், நிலத்தரகு, அரசு சேவைகள், போக்குவரத்து சேவைகள், வணிக சேவைகள் எனப் பல தொழில் வகைகளாக பிரிக்கப்படும்.

தரவு கிடைக்கும் தன்மையைப் பொறுத்து எந்த முறையைப் பயன்படுத்த வேண்டும் என்பது தீர்மானிக்கப்படுகிறது.

எடுத்துக்காட்டாக, விவசாயம் மற்றும் உற்பத்தித் துறைகளில் உற்பத்தி புள்ளிவிவரங்கள் எளிதாகக் கிடைக்கும், ஆகவே உற்பத்தி அல்லது மதிப்பு கூட்டல் முறையைப் பயன்படுத்துவதன் மூலம் இந்தத் துறைகளின் பங்களிப்பு கண்டறியப்படுகிறது. கட்டுமானத் துறையில் செலவீடுகளுக்கான புள்ளிவிவரங்கள் மிகவும் எளிதாகக் கிடைக்கிறது என்பதால் தேசிய வருவாயில் கட்டுமானத் துறையின் பங்களிப்பு

செலவு முறையைப் பயன்படுத்தி மதிப்பிடப்படுகிறது. இந்த இரண்டிற்கும் மாறாக, கட்டுமானத் துறைக்கு உற்பத்தி முறை, செலவீட்டு முறை இரண்டுமே பயன்படுத்தப்படுகிறது.

இறுதியாக, சேவைத் துறைக்கு, வருவாய் புள்ளிவிவரங்கள் மிகவும் எளிதாகக் கிடைக்கும், என்பதால் வருமான முறையின் அடிப்படையில் தேசிய வருவாயில் சேவைத்துறையின் பங்களிப்பு மதிப்பிடப்படுகிறது.

---

## உற்பத்தி முறையில் தேசிய வருவாய்

### சமந்தா

உற்பத்தி முறையில் தேசிய வருவாயைக் கணக்கிடுவதற்கு மூன்று படிகள் உள்ளன.

1) உற்பத்தி செய்யும் நிறுவனங்களை அடையாளம் கண்டு அவற்றின் தொழில் செயல்பாடுகளின் அடிப்படையில் துறைவாரியாக வகைப்படுத்தப்படுகிறது.

2) ஒரு பொருளாதாரத்தின் உள்நாட்டுப் பகுதியில் உள்ள ஒவ்வொரு உற்பத்தி நிறுவனத்தாலும் சேர்க்கப்பட்ட நிகர மதிப்பு கணக்கிடப்படுகிறது.அதிலிருந்து அனைத்து நிறுவரங்களாலும் சேர்க்கப்பட்ட நிகர மதிப்பைக் கூட்டி நிகர உள்நாட்டு பொருளாக்க மதிப்பு பெறப்படுகிறது.

3) இதனோடு வெளிநாட்டிலிருந்து பெறப்பட்ட நிகர வருவாயை சேர்ப்பதன் மூலம் ஒரு பொருளாதாரத்தின் தேசிய வருவாய் பெறப்படுகிறது.

தொழில்துறைகளை வகைப்படுத்துதல்:

பொதுவாக, தொழில்துறை துறைகள் மூன்று வகைகளாக பிரிக்கப்பட்டுள்ளன:

a) முதன்மைத் துறை,

b) இரண்டாம் நிலை துறை, மற்றும்

c) மூன்றாம் நிலை அல்லது சேவைத் துறை.

**முதன்மைத் துறை:**

இதில் விவசாயம், அதனுடன் தொடர்புடைய துறைகள், வனத்துறை, மீன்பிடித்துறை, சுரங்கத்துறை, குவாரி. இத்துறையில் இயற்கை வளங்களிலிருந்து நிலக்கரி, இரும்பு தாது மற்றும் பிற கனிமங்கள் மூலப்பொருட்கள் உற்பத்தி செய்யப்படுகிறது. இந்தியாவில் முதன்மைத் துறை (i) விவசாயம், (ii)வனத்துறை, மரம் வெட்டுதல் (iii) மீன்பிடித்துறை (iv) சுரங்கம், குவாரி என வகைபடுத்தப்பட்டுள்ளது.

**இரண்டாம் நிலை துறை:**

இது தொழிலக உற்பத்தித் துறைகளைக் கொண்டுள்ளது. இந்தியாவில், இரண்டாம் நிலை துறை (i) பதிவு செய்யப்பட்ட உற்பத்தி, (ii) பதிவு செய்யப்படாத உற்பத்தி, (iii) கட்டுமானம், (iv) மின்சாரம், எரிவாயு, நீர் வழங்கல் என பிரிக்கப்பட்டுள்ளது.

மூன்றாம் நிலை துறை:

இது சேவைத்துறைகளைக் கொண்டுள்ளது. இந்தியாவில் இந்தத் துறை பின்வருவனவற்றை கொண்டுள்ளது: (i) இரயில்வே, (ii) பிற போக்குவரத்து, கிடங்கு/ பண்டசாலைகள், (iii) தகவல் தொடர்பு, (iv) வர்த்தகம், ஹோட்டல்கள், உணவகங்கள், (v) வங்கி, காப்பீடு, (vi) நிலத் தரகு, குடியிருப்புகளின் உடைமை, வணிக சேவைகள், (vii) பொது நிர்வாகம், பாதுகாப்பு மற்றும் (viii) மற்ற சேவைகள்.

நிகர மதிப்புக் கூட்டலின் மதிப்பீடு:

ஒரு பொருளாதாரத்தின் உற்பத்தித் துறைகள் அடையாளம் காணப்பட்ட பிறகு, அடுத்த கட்டமாக இந்த துறைகள் ஒவ்வொன்றாலும் கூட்டப்படும்/சேர்க்கப்படும் நிகர மதிப்பு அளவிடப்படுகிறது. மதிப்புக் கூட்டல் என்ற சொல் உற்பத்தி செயல்பாட்டால் மூலப்பொருட்களுடன் (உள்ளீட்டுப் பொருட்கள்/இடைநிலைப் பொருட்கள் எனக் குறிப்பிடப்படுகிறது) எவ்வளவு மதிப்பு கூட்டப்பட்டுள்ளது என்பதைக் குறிக்கிறது.

ஒரு நிறுவனத்தால் ஓராண்டில் தயாரிக்கப்படும் மொத்தப் பொருட்கள் அனைத்தையும் அதன் வெளியீடு என்று குறிப்பிடலாம். மதிப்பு கூட்டல் என்பது வெளியீட்டின் மதிப்புக்கும், அதை தயாரிக்கத் தேவையான உள்ளீட்டுப்பொருட்கள்/இடைநிலைப்பொருட்களின் விலைக்கும் உள்ள வேறுபாடே ஆகும்.

உதாரணமாக ஒரு நிறுவனம் ஒரு வருடத்தில் 100,000 ரூபாய் மதிப்புள்ள பொருட்களை தயாரிக்கிறது, அப்பொருட்களை ஆக்கத் தேவையான உள்ளீட்டுப் பொருட்களின் விலை 60,000 ரூபாய் என வைத்துக்கொள்வோம், அந்நிறுவனத்தால் சேர்க்கப்பட்ட மதிப்பின் அளவு 100,000 - 60,000 = 40,000. ஆகவே அந்நிறுவனத்தின் மதிப்பு கூட்டலின் அளவு 40,000 ரூபாய் ஆகும்

.இவ்வாறு ஒரு தேசத்தில் உள்ள அனைத்து உற்பத்தி நிறுவனங்களின் மதிப்புக் கூட்டலின் அளவுகள் கணக்கிடப்பட்டு அவற்றை ஒன்றாகக் கூட்டித் தொகுப்பதன் மூலம் மொத்த மதிப்புக் கூட்டலின் அளவு கண்டறியப்படுகிறது.

ஒரு தேசத்தின் மொத்த உள்நாட்டு உற்பத்தி என்பது அதன் உள்நாட்டு எல்லைக்குள் உள்ள அனைத்து உற்பத்தி அலகுகளாலும் சேர்க்கப்பட்ட மதிப்புக் கூட்டலின் மொத்தக் கூட்டுத்தொகை ஆகும்.

இன்னொரு உதாரணத்தின் மூலம் இதை விரிவாகப் புரிந்துகொள்ளமுடியும்.

ஒரு பொருளாதாரம் மூன்று உற்பத்தி நிறுவனங்களை மட்டுமே கொண்டுள்ளது என்று வைத்துக்கொள்வோம், அதில் முதல் நிறுவனம் தானியத்தை உற்பத்தி செய்கிறது, இரண்டாவது நிறுவனம் தானியத்தை மாவாக்குகிறது. மூன்றாவது நிறுவனம் மாவைத் திண்பண்டமாக ஆக்குகிறது.

| நிறுவனம் | ஆக்கிய பொருள் | வெளியீட்டுப் பொருளின் மதிப்பு | இடைநிலை நுகர்வின் மதிப்பு | மதிப்புக்கூட்டல் |
|---|---|---|---|---|
| 1 | தானியம் | 100 | 10 | 90 |
| 2 | மாவு | 150 | 90 | 60 |
| 3 | திண்பண்டம் | 250 | 150 | 100 |
| | மொத்தம் | 500 | 250 | 250 |

முதல் நிறுவனம் ஆக்கிய தானியத்தின் மதிப்பு 100 ரூபாய். அந்த தானியம் இரண்டாவது நிறுவனத்தால் மாவாக்கப்பட்ட போது அதன் மதிப்பு 150 ரூபாய். மூன்றாவது நிறுவனம் இந்த மாவை திண்பண்டமாக்கும் போது அதன் மதிப்பு 250 ரூபாய். மூன்று நிறுவனங்களாலும் ஆக்கப்பட்ட வெளியீட்டுப் பொருட்களின் மொத்த மதிப்பு 500 ரூபாய் (100+150+250) ஆகும். ஆனால் இந்த 500 ரூபாயை மொத்த பொருளாக்க மதிப்பாகக் குறிப்பிட முடியாது. ஏனென்றால் மாவு, திண்பண்டம் ஆகிய இரண்டு பொருட்களுக்கும் தானியமே உள்ளீட்டுப் பொருளாக உள்ளது என்பதால் தானியத்தின் மதிப்பு இரு முறை சேர்க்கப்படுகிறது. மூன்று நிறுவனங்களாலும் சேர்க்கப்பட்ட மதிப்புக்கூட்டலின் அளவு முறையே 90, 60, 100 மட்டுமே அவற்றின் மொத்தத்தொகை 250 ரூபாய் மட்டுமே.வெளியீட்டுப் பொருட்களின் மொத்தமதிப்பு 500 ரூபாய். இதில் இடைநிலைப் பொருளின் மதிப்பு இருமுறை சேர்க்கபடுகிறது (double counting). இடைநிலைப் பொருளின் மதிப்பு இருமுறை சேர்க்கப்படுவதை தவிர்க்க ஒவ்வொரு நிறுவனத்தின் வெளியீட்டு மதிப்பையும் அப்படியே பயன்படுத்தாமல் அந்நிறுவனத்தால் சேர்க்கப்பட்ட மதிப்புக்கூட்டலின் அளவு மட்டுமே கணக்கிடப்படுகிறது. அதாவது வெளியீட்டு மதிப்பில் இடைநிலைப் பொருட்களின் மதிப்பு நீக்கப்படுகிறது.

மூன்று நிறுவனங்களால் சேர்க்கப்பட்ட மதிப்புக் கூட்டலின் மொத்தத்தொகையான 90 + 60 + 100 = 250 என்பதே மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு எனப்படுகிறது.

ஒரு நாட்டின் அனைத்து உற்பத்தி நிறுவனங்களாலும் கூட்டப்பட்ட மதிப்புகளின் கூடுதலிலிருந்து மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு எனப்படுகிறது.இதிலிருந்து தேய்மான மதிப்பைக் கழிப்பதன் மூலம் நிகர உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு பெறப்படுகிறது. சந்தை விலையில் கணக்கிடப்பட்ட உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பிலிருந்து நிகர சுற்றடி வரிகளைக் கழிக்கும் போது அடிப்படை விலையில் நிகர உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு பெறப்படுகிறது.

மத்திய புள்ளியியல் அலுவலகத்தின் மதிப்பீட்டு முறையின் படி மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பின் வரையறை பின்வருமாறு:

மொத்த மதிப்புக் கூட்டலையும் (GVA), பொருட்கள் மீதான அனைத்து வரிகளின் கூட்டுத்தொகையையும் ஒன்றாகக் கூட்டி அதிலிருந்து மானியங்களை கழிப்பதன் மூலம் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு (அடிப்படை விலைகளில்) பெறப்படுகிறது. மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பை தொகுப்பதற்கு பயன்படுத்தப்படும் மொத்த வரி வருவாயில் சரக்கு சேவை அல்லாத வரி வருவாயும், சரக்கு சேவை வரி வருவாயும் அடங்கும்.)

தேசிய வருவாய்:

நிகர உள்நாட்டுப் பொருளாக்க மதிப்புடன் (அடிப்படை விலையில்) நிகர வெளிநாட்டு வருவாயை கூட்டுவதன் மூலம் தேசிய வருவாய் பெறப்படுகிறது.

நிகர வெளிநாட்டு வருவாய்:

1) நிகர ஊழியர் இழப்பீட்டையும்,

2) சொத்து மற்றும் தொழில்முனைவு மூலம் பெறும் நிகர வருவாயையும்

3) தேசத்தின் வெளிநாட்டு நிறுவனங்களின் நிகர வருவாயையும் கூட்டுவதன் மூலம் பெறப்படுகிறது.

நிகர வெளிநாட்டு ஊழியர் இழப்பீடு:

தற்காலிகமாக ஓராண்டுக்கும் குறைவாக வெளிநாட்டில் தங்கியிருக்கும் அல்லது வேலைபார்க்கும் தேசக்குடிமக்கள் வெளிநாட்டிலிருந்து பெரும் வருவாய்க்கும், தேசத்தில் தற்காலிகமாக ஓராண்டுக்கும் குறைவாக தங்கியிருக்கும் அல்லது வேலைபார்க்கும் வெளிநாட்டினர் தேசத்திலிருந்து பெறும் வருவாய்க்கும் இடையிலான வேறுபாடு.

வெளிநாட்டில் சொத்து, தொழில்முனைவு மூலம் பெறும் நிகர வருவாய்:

தேசக்குடிமக்கள் வெளி நாட்டிலிருந்து வட்டி, வாடகை, ஈவுத்தொகை லாபம் மூலம் பெறும்

வருவாய்க்கும், தேசத்திலிருந்து வெளி நாட்டிற்கு வட்டி, வாடகை, ஈவுத்தொகை லாபம் மூலம் அளிக்கப்படும் வருவாய்க்கும் இடையிலான வேறுபாடு.

தேசத்தின் வெளிநாட்டு நிறுவனங்கள் தக்கவைத்துள்ள நிகர வருவாய்:

நிறுவனங்களின் விநியோகிக்கப்படாத லாபம் தக்கவைத்துள்ள வருவாய் என்று குறிப்பிடப்படுகிறது. வெளிநாட்டில் உள்ள ஒரு நாட்டின் நிறுவனங்கள் தக்கவைத்துள்ள லாபத்திற்கும், அந்த நாட்டிலுள்ள வெளி நாட்டு நிறுவனங்கள் தக்கவைத்துள்ள லாபத்திற்கும் இடையிலான வேறுபாடு.

மொத்த உள்நாட்டு பொருளாக்க மதிப்பு (அடிப்படை விலை) + வெளிநாட்டு நிகர வருவாய் = மொத்த தேசிய பொருளாக்க மதிப்பு(அடிப்படை விலை)

மொத்த உள்நாட்டு பொருளாக்க மதிப்பு (சந்தை விலை) + வெளிநாட்டு நிகர வருவாய் = மொத்த தேசிய பொருளாக்க மதிப்பு(சந்தை அடக்க விலை)

நிகர உள்நாட்டு பொருளாக்க மதிப்பு (சந்தை விலை) + வெளிநாட்டு நிகர வருவாய் = நிகர தேசிய பொருளாக்க மதிப்பு(சந்தை விலை)

நிகர உள்நாட்டு பொருளாக்க மதிப்பு (அடிப்படை விலை) + வெளிநாட்டு நிகர வருவாய் = நிகர தேசிய பொருளாக்க மதிப்பு(அடிப்படை விலை)

உற்பத்தி முறை மூலம் பொருளாதாரத்தின் தேசிய வருவாயை மதிப்பிடும் போது பின்வருவனவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

சொந்த நுகர்வுக்காக செய்யப்படும் உற்பத்தியும் தேசிய வருவாயில் சேர்க்கப்பட வேண்டும். உற்பத்தி செய்யப்பட்ட பொருளின் அளவை, சந்தை விலையால் பெருக்கி தேசிய வருவாயில் சேர்க்கவேண்டும்.

அரசு, தனியார் நிறுவனங்கள், குடும்பங்கள் தங்களுக்காக செய்யும் உற்பத்தியும் கணக்கிடப்பட்டு தேசிய வருவாயில் சேர்க்கப்பட வேண்டும்.

உரிமையாளர் வசிக்கும் வீடுகளின் வாடகையும் கணக்கிடப்பட்டு தேசிய வருவாயில் சேர்க்கப்பட வேண்டும்.

இரண்டாம் முறையாக விற்கப்படும் மறு பயன்பாட்டுப் பொருட்களின் வர்த்தக மதிப்பை தேசிய வருவாயின் பகுதியாக சேர்க்கப்படுவதில்லை. ஆனபோதும் அவை இடைத்தரகர்களின் மூலம் வர்த்தகம் செய்யப்பட்டால் அதற்காக பெறப்படும் தரகுசேவைக் கட்டணம் தேசிய வருவாயில் சேர்க்கப்படுகிறது.

# வருவாய் முறையில் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு:

**சமந்தா**

ஒரு நிறுவனத்தின் உற்பத்திப் பொருட்களில் சேர்க்கப்பட்ட மதிப்புக் கூட்டல் என்பது உற்பத்திகாரணிகள் பெறும் வருவாயான கூலி, லாபம், வாடகை, வட்டி ஆகியவற்றின் கூட்டுத் தொகைக்கு சமமாக இருக்கும். ஒரு நாட்டின் ஓராண்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள், சேவைகளிலிருந்து கிடைக்கும் வருவாய், நேரடியாக உற்பத்தியில் ஈடுபடும் உழைப்பாளர்களுக்கு கூலி/ஊதியமாகவும், நில உரிமையாளர்களுக்கு வாடகையாகவும், நிதி முதலாளிகளுக்கு வட்டியாகவும், தொழில் முதலாளிகளுக்கு லாபமாகவும் பகிர்ந்தளிக்கப்படுகிறது. ஒரு நாட்டின் எல்லா உற்பத்தி நிறுவனங்களின் வருவாயை ஒன்று சேர்த்துக் கூட்டுவதன் மூலம் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது. ஒரு நாட்டின் கூலி, லாபம், வாடகை, வட்டி ஆகியவற்றின் மொத்தத்தொகையுடன் வெளிநாட்டில் இருந்து கிடைக்கும் நிகர வருவாயையும், கூட்டுவதன் மூலம் ஒரு நாட்டின் தேசிய வருவாய் கணக்கிடப்படுகிறது.

வருவாய் முறையின் மூலம் தேசிய வருவாயை மதிப்பிடுவதில் உள்ள முக்கிய படிகள்:

1) உற்பத்தி நிறுவனங்கள் அடையாளம் காணப்படுகிறது. உற்பத்தி முறையால் ஏற்றுக்கொள்ளப்பட்ட உற்பத்தி அலகுகளின் வகைப்பாட்டையே தேசிய வருவாயை மதிப்பிடுவதற்கான வருவாய் முறைக்கும் பயன்படுத்தலாம்.

2) வருவாய் பல வகையாக வகைப்படுத்தப்படுகிறது. அவையாவன:

அ) கூலி / ஊழியர் இழப்பீடு

ஆ) வாடகை

இ) வட்டி

ஈ) லாபம்

உ) சுயதொழில் செய்பவர்களின் கலப்பு வருமானம்

3) வருவாயின் கூறுகள் மதிப்பிடப்படுகின்றன.

4) ஒரு நாட்டின் மொத்த வருவாயுடன், வெளிநாட்டிலிருந்து பெறும் நிகர வருவாயையும் சேர்க்கும் போது தேசிய வருவாய் பெறப்படுகிறது.இதனுடன் சுற்றடி வரியை சேர்க்கும் பொது நிகர உள் நாட்டுப் பொருளாக்க மதிப்பை பெறலாம். அதனுடன் தேய்மான மதிப்பைக் கூட்டுவதன் மூலம் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு பெறப்படுகிறது.

தேசிய வருவாய் = ஊதியம் + வாடகை + வட்டி + லாபம் +வெளி நாட்டிலிருந்து பெறப்படும் நிகர

வருவாய்

Y = W + R + In + P + NFIA,

இதில் Y-தேசிய வருவாய் , W-ஊதியம், R-வாடகை, In-வட்டி, P-லாபம், NFIA-வெளி நாட்டிலிருந்து பெறப்படும் நிகர வருவாய்.

மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு = தேசிய வருவாய் + சுற்றடிவரி + தேய்மான மதிப்பு

GDP = Y+iT+D;

iT = மறைமுகவரி, D = தேய்மானம்

தொழிலாளர் சேவைகளை வழங்குவதற்காக அவர்களுக்கு இழப்பீடு வழங்கப்படுகிறது எனும் பொருளில் கூலியானது ஊழியர் இழப்பீடு (CE) எனவும் குறிப்பிடப்படுகிறது. லாபம் இயக்க உபரி (OS) எனவும் தொழில் நிறுவனர் பெரும் வருவாய் எனவும் குறிப்பிடப்படுகிறது.

சுயதொழில் செய்பவரின் வருவாயை கலந்த வருவாய் (MY) எனக் குறிப்பிடலாம். உதாரணமாக ஒருவர் தன் சொந்தப் பணத்தைப்போட்டு தன் வீட்டிலே ஒரு சிறு கடையை நடத்துகிறார் என வைத்துக்கொள்வோம். அந்தக் கடையில் அவரே பணியாளராகவும் இருக்கிறார் அவர் பெறும் வருவாயில் எவ்வளவு கூலியைச் சேரும், எவ்வளவு வாடகை, லாபத்தைச் சேரும் என பிரித்தறிய இயலாது ஆகவே அவரது வருவாய் மொத்தமாக சுயதொழில் செய்பவரின் கலந்த வருவாய் என குறிப்பிடப்படுகிறது.

ஊழியர் இழப்பீடு (CE), இயக்க உபரி (OS), சுயதொழில் செய்பவரின் வருவாய் கலந்த வருவாய் (MY) ஆகியவற்றை வெளி நாட்டிலிருந்து பெறும் நிகரவருவாயுடன் ஒன்றாகக் கூட்டுவதன் மூலம் தேசியவருவாயை பெறலாம்.

Y = CE + OS + MY + NFIA

வருவாய் முறையின் மூலம் பொருளாதாரத்தின் தேசிய வருவாயைக் கணக்கிடும் போது பின்வருவனவற்றை கருத்தில் கொள்ள வேண்டும்.

- வருவாயாக அல்லாது பிறருக்கு செலுத்தப்படும் அல்லது பிறரிடமிருந்து பெறப்படும் பணம் தேசிய வருவாய் கணக்கீட்டில் சேர்க்கப்படாது.
- உரிமையாளரால் ஆக்கிரமிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கும் வாடகை கணக்கிடப்பட்டு தேசிய வருவாய் கணக்கீட்டில் சேர்க்கப்படும்.
- கடத்தல் அல்லது சூதாட்டத்தின் மூலம் ஈட்டப்படும் வருமானம், திடீர் ஆதாயங்கள், பரிசு சீட்டின் மூலம் பெறப்படும் பணம் தேசிய வருவாய் கணக்கீட்டில் சேர்க்கப்படுவதில்லை.

- ஒரு பொருளாதாரத்தின் தேசிய வருவாயில் வருமான வரி, பெரு நிறுவன வரி போன்ற நேரடி வரிகள் அடங்கும். இறப்பு வரி, பரிசு வரி, சொத்து வரி போன்றவை கடந்த கால சேமிப்பிலிருந்து செலுத்தப்பட வேண்டும் என்பதால் இந்த வரிகள் தேசிய வருவாய்க் கணக்கீட்டில் சேர்க்கப்படுவதில்லை.

இரண்டாவது முறையாக வர்த்தகம் செய்யப்படும் மறுபயன்பாட்டுப் பொருட்கள் தேசிய வருவாய் கணக்கீட்டில் சேர்க்கப்படுவதில்லை.

---

# செலவீட்டு முறையில் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு:

**சமந்தா**

ஒரு நாட்டின் வருவாய் பல்வேறு தரப்பினருக்கு பங்கீடு செய்யப்படுகிறது. அத்தகைய வருவாயை இரண்டு பகுதிகளாகப் பிரிக்கலாம், அவை (அ) உழைப்பின் வருவாய் (ஆ)மூலதனம், தொழில்முனைவு உரிமையிலிருந்து பெறும் வருவாய். உழைப்பின் வருவாயை கூலியாக தொழிலாளர்கள் பெறுகிறார்கள். தொழில் முனைவு உரிமையிலிருந்து பெறும் வருவாயை லாபமாக முதலாளிகள் பெறுகிறார்கள். இந்த வருவாய் நுகர்வுக்கு பயன்படுத்தப்படுகிறது அல்லது சேமிக்கப்படுகிறது. சேமிப்பிலிருந்து முதலீடுகளுக்கு நிதியளிக்கப்படுகிறது. ஒரு பொருளாதாரத்தின் பல்வேறு பரிவர்த்தனையாளர்களின் இறுதிச் செலவுகளின் கூட்டுத்தொகையிலிருந்தும் தேசிய வருவாயையும், மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பையும் கணக்கிடலாம்.

1. ஒரு நாட்டின் செலவுகள் பல்வேறு வகையாக வகைப்படுத்தப்பட்டுள்ளன. 1. தனியார் இறுதி நுகர்வு செலவீடுகள் (Ch - household consumption ) எனப்படுகிறது.

2. அரசுத்துறையில் செய்யப்படும் இறுதி நுகர்வு செலவு (Cg- government consumption) எனப்படுகிறது.

3. மொத்த உள்நாட்டு நிலை மூலதன உருவாக்கம்

நிறுவனங்கள் மூலதன பொருட்களை (NDKF) வாங்குவதற்கு செய்யும் செலவு.

4.சரக்கிருப்புகளில் ஏற்படும் மாற்றம் (K)

5. நிகர ஏற்றுமதிகளுக்கு (NE) செய்யப்படும் செலவு.

செலவீட்டு அடிப்படையில் மொத்த உள் நாட்டு பொருளாக்க மதிப்பின் பல்வேறு கூறுகளாவன.

1. தனியார் இறுதி நுகர்வு செலவு (Ch)

தனியார் இறுதி நுகர்வு என்பது உள் நாட்டு மக்கள், வெளி நாட்டு வாழ் குடிமக்களின்

நடப்புக்கணக்கிலிருந்து செய்யப்படும் செலவீடாக வரையறுக்கப்படுகிறது.இங்கு செலவீடு எனப்படுவது நீடித்த நுகர்வுபொருள் (நிலம் தவிர), உடனடி நுகர்வுப் பொருள்களை பெறுவதற்காக செய்யப்படுவதைக் குறிப்பிடுகிறது. இதில் வெளி நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்களும் அடங்கும். உரிமையாளர்-ஆக்கிரமிக்கப்பட்ட குடியிருப்புகளுக்கான வாடகை, சொந்தக் கணக்கு உற்பத்தியின் நுகர்வு, பணம் அல்லாத கொடுப்பனவுகள், பணியாளர்களுக்கான உணவு, தங்குமிடம், ஆடைக்கான செலவுகளும் இதில் அடங்கும்.

தனியார் இறுதி செலவீடுகளை மதிப்பிடுவதற்கு இரண்டு வகையான தரவுகள் தேவை:

(அ) சந்தையில் விற்பனையின் மொத்த அளவு, மற்றும் (ஆ) பொருட்கள், சேவைகளின் சில்லறை விலைகள்.

பொருட்கள்-சேவைகளின் மொத்த அளவை அவற்றின் சில்லறை விலைகளால் பெருக்கவேண்டும். சொந்த நுகர்வுக்கான உற்பத்தி என்பதும் உற்பத்தி, வருவாயின் ஒரு பகுதியாக உள்ளது என்பதால் அதுவும் இறுதி நுகர்வு செலவின் ஒரு பகுதியாகவும் உள்ளது. சொந்த நுகர்வுக்கான பொருட்களின் உற்பத்தி அளவை அருகிலுள்ள அவற்றின் சந்தை விலைகளால் பெருக்க வேண்டும். உரிமையாளரால் ஆக்கிரமிக்கப்பட்ட குடியிருப்புகளின் கணக்கிடப்பட்ட வாடகையும் உற்பத்தி, வருவாயின் பகுதியாக ஏற்றுக்கொள்ளப்பட்டு தனியார் இறுதி நுகர்வு செலவுகள் சேர்க்கப்படுகிறது.

அரசின் இறுதி நுகர்வு செலவு(Gh):

அரசாங்கத்தின் இறுதி நுகர்வு செலவு என்பது அதன் நடப்புக் கணக்கு செலவீடாக வரையறுக்கப்படுகிறது. இதன் மதிப்பு அரசாங்க நிர்வாக சேவைகளை வழங்குவதில் பயன்படுத்தப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளுக்கான செலவுகளிலிருந்து அவற்றின் விற்பனையைக் கழித்து பெறப்படும் அளவுக்கு சமம்.

அரசின் மத்திய, மாநில, உள்ளூர் அளவிலான பொது அமைப்புகள், அனைத்து துறைகள், அலுவலகங்கள், நிறுவனங்கள், அரசு முகவர்களாக செயல்படும் அமைப்புகள், அவற்றின் செலவீடுகள் நிதிநிலையறிக்கை அல்லது நிதிநிலையறிக்கைக்கு வெளியிலான நிதிகளின் மூலம் அளிக்கப்படுகிறது.

அரசின் பொதுத்துறை நிறுவனங்கள் இதிலிருந்து விலக்கப்பட்டுள்ளன.

அரசாங்கத்தின் இறுதி நுகர்வுச் செலவின் மதிப்பானது பொதுமக்களின் கூட்டுப்

பயன்பாட்டிற்காக உருவாக்கப்பட்ட சேவைகளின் (பொது சுகாதாரம், கலாச்சார சேவைகள், பாதுகாப்பு, சட்டம் போன்றவை) மொத்த மதிப்புக்கு சமம். அவற்றின் மதிப்பு அடிப்படைவிலையில் கணக்கிடப்படுகின்றன. ஏனென்றால் இச்சேவைகள் பொதுவாக அரசால் விற்கப்படுவதில்லை.

இந்த சேவைகளின் விலையானது (அ) இடைநிலை நுகர்வு, (b) ஊழியர் இழப்பீடு (ஊதியம், சம்பளம் ரொக்கம் மற்றும் பொருளில், (c) வெளிநாடுகளில் அரசின் தூதரகங்கள், துணைத் தூதரகங்களுக்காக நேரடி கொள்முதல் செய்யப்படும் பொருட்கள் மற்றும் சேவைகளின் மதிப்பு இவை அனைத்தின் கூட்டுத்தொகையிலிருந்து (d) அரசால் விற்பனை செய்யப்படும் பொருட்கள், சேவைகளை கழிக்கவேண்டும். உதாரணமாக அரசு மருத்துவமனைகளில் சேவைகளை பயன்படுத்திக்கொள்ள தனிநபர்களிடம் இருந்து வசூலிக்கப்படும் குறைந்தபட்ச பணம், மானிய விலையில் அளிக்கப்படும் பொருட்கள், சேவைகள் ஆகியவற்றை இதற்கு உதாரணமாகக் குறிப்பிடலாம்.

**மொத்த உள்நாட்டு நிலை மூலதன உருவாக்கம் (GFCF- gross fixed capital formation):**

மொத்த உள்நாட்டு நிலையான மூலதன உருவாக்கம் என்பது உள்நாட்டுப் பகுதியில் நிகழும் மொத்த நிலையான மூலதன உருவாக்கத்தைக் குறிப்பிடுகிறது. இவை கட்டுமானம், இயந்திரம் மற்றும் உபகரணங்கள் என வகைப்படுத்தப்படுகின்றன. தொழிலகங்கள், அரசு உற்பத்தி அமைப்புகள், இலாப நோக்கற்ற தனியார் நிறுவனங்கள் ஆகியவற்றின் நிலையான சொத்துக்களின் முதலீட்டுச் செலவுகள் இதில் அடங்கும். இரண்டாம் பயன்பாட்டிற்கான விற்பனைப்பொருட்கள், விற்பனை செய்யப்படும் பழுதடைந்த பொருட்களை இதிலிருந்துக் கழித்துவிடவேண்டும். குடிமக்களின் குடியிருப்புக் கட்டுமானங்களுக்கான முதலீட்டு செலவுகளும் இதில் அடங்கும்.இராணுவ சேவைக்கான முதலீடுகள் இதில் சேர்க்கப்படுவதில்லை. மொத்த நிலை மூலதன உருவாக்கத்தில் ஓராண்டில் நுகர்வு செய்யப்பட்ட மூலதனத்தின் மதிப்பும் (தேய்மானம்) அடங்கும். இந்த நுகர்வு மூலதனத்தை/தேய்மானத்தைக் கழிப்பதன் மூலம் நிகர நிலை மூலதன உருவாக்கம் பெறப்படுகிறது.

**சரக்கிருப்புகளில் மாற்றம் (NDKF):**

சரக்கிறுப்புகளில் ஏற்படும் மாற்றம் என்பது ஆண்டின் தொடக்கத்திலும் இறுதியிலும் உள்ள சரக்கிறுப்புகளின் சந்தை மதிப்புகளுக்கு இடையிலான வேறுபாடு. ஆண்டின் ஆரம்பத்தில்

இருப்பதை விட, ஆண்டின் இறுதியில் இவற்றின் மதிப்பு அதிகமாக இருந்தால் சரக்கிருப்புகளில் மாற்றத்தின் மதிப்பு நேர்நிறையாகவும், குறைவாக இருந்தால் எதிர்மறையாகவும் அமையும்.

உற்பத்தி நிறுவனங்களின் இருப்பில் உள்ள பொருட்கள், தயாரிப்பில் உள்ள பொருட்கள் (கட்டுமானத் திட்டங்களைத் தவிர) தயாரிக்கப்பட்ட பொருட்களும் இதில் உள்ளடக்கம். வெட்டப்படாத மரங்கள், பயிர்கள் இதில் சேர்க்கப்படுவதில்லை, ஆனால் இறைச்சிக்கான கால்நடைகள், மரக்கட்டைகள், அறுவடை செய்யப்பட்ட பயிர்கள் ஆகியவை இதில் அடங்கும்.

**பொருட்கள், சேவைகளின் நிகர ஏற்றுமதி (NE-Net Exports):**

சரக்குகள், சேவைகளின் நிகர ஏற்றுமதி என்பது ஒரு வருடத்தில் ஒரு நாட்டிலிருந்து மற்ற நாடுகளுக்கு ஏற்றுமதி செய்யப்படும் பொருட்கள், சேவைகளின் மதிப்புக்கும், பிற நாடுகளிலிருந்து இறக்குமதி செய்யப்படும் பொருட்கள், சேவைகளின் மதிப்புக்கும் இடையே உள்ள வேறுபாடு ஆகும். ஏற்றுமதி மதிப்பு இறக்குமதி மதிப்பை விட அதிகமாக இருக்கும் போது நிகர ஏற்றுமதி நேர்நிறையாக இருக்கும். இறக்குமதி மதிப்பு ஏற்றுமதி மதிப்பை விட அதிகமாக இருக்கும் போது நிகர ஏற்றுமதி எதிர்மறையாக இருக்கும்.

செலவு முறை மூலம் கணக்கிடப்படும் மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு (சந்தை விலை) , தனியார் இறுதி நுகர்வு செலவு, அரசாங்கத்தின் இறுதி நுகர்வு செலவு, மற்றும் மொத்த நிலை மூலதன உருவாக்கம், சரக்கிருப்புகளிலான மாற்றம், பொருட்கள், சேவைகளின் நிகர ஏற்றுமதி இவை அனைத்தின் சந்தை விலையிலான கூட்டுத்தொகைக்குச் சமம்.

மொத்த உள்நாட்டுப் பொருளாக்க மதிப்பு = தனியார் செலவு + அரசு செலவு + நிகர மூலதனப் பொருட்களுக்கான செலவு + சரக்கிறுப்புகளில் மாற்றம் + நிகர ஏற்றுமதி செலவு

---

## ‘ஜிடிபி’-யின் குறைபாடுகள்:

### சமந்தா

பாஜக அரசு இந்தியாவை 5 டிரில்லியன் டாலர் பொருளாதாரமாக ஆக்குவோம் என சவால் விட்டது. அதை நிறைவேற்றவில்லை என்பது வேறு விசயம். பெரும்பாலான நாடுகளில் ‘ஜிடிபி’யை அதிகரிப்பதே பொருளாதார வளர்ச்சியின் இலக்காகக் கருதப்படுகிறது. ஒரு நாட்டின் வளர்ச்சியும், சமூக முன்னேற்றமும், மக்களின் வாழ்க்கைத்தரமும் பல பரிமாணங்களைக் கொண்டுள்ளது. அவற்றை ‘ஜிடிபி’-மொத்த உள் நாட்டுப் பொருளாக்கமதிப்பு எனும் போதாக்குறையான ஒற்றை அளவுகோலைக் கொண்டு மட்டுமே அளவிட முடியாது. ‘ஜிடிபி’

மிகவும் மிகைப்படுத்தப்படும் ஒரு பொருளாதார அளவுகோல். 'ஜிடிபி'யின் வளர்ச்சியே பொருளாதார வளர்ச்சியாகவும், அதுவே சமூக முன்னேற்றத்தையும், மக்களின் வாழ்க்கைத்தர மேம்பாட்டையும் ஏற்படுத்தும் என்பது போல் ஒரு முதன்மையான முழுமுதலான குறியீடாகக் கருதப்படுகிறது. ஜிடிபியை அதிகரிப்பதற்கு அளிக்கப்படும் முன்னுரிமை பொருளாதார சமமின்மையைக் குறைப்பதற்கு கொடுக்கப்படுவதில்லை. நாட்டின் 'ஜிடிபி'க்கு அளிக்கப்படும் அதீத முக்கியத்துவம் நாட்டின் பொருளாதாரக் கொள்கைகளையும், திட்டங்களையும், மக்களின் வாழ்க்கைத்தரத்தையும் கடுமையாக பாதிக்கிறது.

'ஜிடிபி' என்பது ஒரு நாட்டின் பொருளாதாரத்தின் அளவை மட்டுமே குறிப்பிடுகிறது. அந்த 'ஜிடிபி'யில் எத்தனை விழுக்காடு உழைக்கும் மக்களை சென்றடைந்தது என்பதை 'ஜிடிபி' வளர்ச்சி விகிதம் தெரிவிப்பதில்லை. 'ஜிடிபி' வளர்ச்சி என்பது ஒரு நாட்டின் உண்மையான வளர்ச்சியை பிரதிபலிப்பதில்லை.

முதலாளித்துவ உற்பத்திமுறையால் ஏற்பட்டுள்ள சமூகப் பொருளாதார ஏற்றத்தாழ்வுகளையும், வறுமையையும் நேர்த்தியாக மறைக்கவே இத்தகையப் போக்கு உதவுகிறது. நாட்டில் வேலையின்மை அதிகரிப்பதையோ, தொழிலாளர்கள், ஊழியர்களின் ஊதியம் குறைவதையோ 'ஜிடிபி' வெளிக்காட்டுவதில்லை.ஒரு நாட்டின் 'ஜிடிபி' மதிப்பு, வளர்ச்சி அதிகமாக இருக்கலாம், ஆனால் ஒரு நாட்டின் குடிமக்கள் அனைவரும் பசி, பட்டினி இல்லாமல் மூன்று வேலை உணவு கிடைக்கிறதா, அதற்கான வருவாய் கிடைக்கிறதா, வருவாய் தரும் வேலை கிடைக்கிறதா என்பதை 'ஜிடிபி' மதிப்பை மட்டுமே வைத்து கூற முடியாது.

ஒரு நாட்டின் 'ஜிடிபி' மதிப்பு அந்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் சேவைகளின் அளவையே குறிப்பிடுகிறது. ஆனால் ஆக்கப்பூர்வமான பொருட்கள் சேவைகள் உருவாக்கப்பட்டதா, இல்லை அழிவுபூர்வமான பொருட்கள் உருவாக்கப்பட்டதா என்பதை 'ஜிடிபி' வளர்ச்சியால் வேறுபடுத்திக் காட்ட இயலாது, ஒரு நாட்டில் அதிகமாக போர்த் தளவாடங்களே உற்பத்தி செய்யப்படுகிறது என்றாலும் அது வளர்ச்சியாகத் தான் மதிப்பிடப்படும். ஒரு நாட்டின் காடுகள், கனிம வளங்கள், இயற்கை வளங்களை அளவுக்கதிகமாக பயன்படுத்தி அழித்தாலும் அதுவும் 'ஜிடிபி' வளர்ச்சியாகத் தான் மதிப்பிடப்படும். ஆகவே 'ஜிடிபி' வளர்ச்சி என்பது நீடித்த/ வளங்குன்றா வளர்ச்சியைக் குறிப்பிடும் அளவுகோல் அல்ல.

ஒரு நாட்டின் தேசிய வருவாய் சமூகத்தின் பல்வேறு தரப்பினரிடம் எவ்வாறு பகிரப்படுகிறது என்பதையும் 'ஜிடிபி' அளவுகோல் மூலம் தெரிந்து கொள்ளமுடியாது. 'அ', 'உ' என

இரு நாடுகள் இருப்பதாக வைத்துக்கொள்வோம். 'அ' நாட்டில் முதல் 10 விழுக்காட்டினர் அந்நாட்டின் 90 விழுக்காடு வருவாயை பெறுகின்றனர், மீதமுள்ள 90 விழுக்காட்டினர் வெறும் 10 விழுக்காடு வருவாயையே பெறுகின்றனர். 'உ' நாட்டில் முதல் 30 விழுக்காட்டினர் 40 விழுக்காடு வருவாயை பெறுகின்றனர், மீதமுள்ள 70 விழுக்காட்டினர் 60 விழுக்காடு வருவாயை பெறுகின்றனர். ஆனபோதும் இரு நாடுகளும் ஒரே 'ஜிடிபி' மதிப்பையேக் கொண்டுள்ளன.'அ' நாட்டுடன் ஒப்பிடும் போது 'உ' நாட்டில் பொருளாதார ஏற்றத்தாழ்வு குறைவாக உள்ளது. ஆனால் இந்த வேறுபாட்டை 'ஜிடிபி' அளவுகோலால் வெளிக்காட்ட முடியாது.

ஒரு நாட்டின் நுகர்வு வருவாயிலிருந்து செய்யப்பட்டதா இல்லை கடன் அட்டையிலிருந்து செய்யப்பட்டதா என்பதையும் 'ஜிடிபி'யால் வேறுபடுத்திக் காட்டமுடியாது.

சந்தையில் நடைபெறும் பணப்பரிவர்த்தனைகளை மட்டுமே 'ஜிடிபி' மதிப்பின் மூலம் கணக்கிடப்படுகிறது. இயற்கை வளங்களை அழிப்பதால் ஏற்படும் பொருளாதார பாதிப்புகள், காலநிலை மாற்றத்தில் அது ஏற்படுத்தும் தாக்கம் ஆகியவை 'ஜிடிபி' மதிப்பீட்டில் புறக்கணிக்கப்படுகிறது.

'ஜிடிபி' மதிப்பில் ஒரு நாட்டின் நிலை மூலதன நுகர்வு/தேய்மான மதிப்பு நீக்கப்படாமல் இருப்பதால், அதிக தேய்மான மதிப்பைக் கொண்ட பொருளாதாரங்களின் அளவு மிகைப்படுத்தப்படுவதற்கான வாய்ப்பு உள்ளது.

பண்ட மாற்றப் பரிவர்த்தனைகள் 'முழுவதும் 'ஜிடிபி' கணக்கீட்டில் சேர்க்கப்படுவதில்லை.பதிவு செய்யப்படாத தொழிலகங்களைக் கொண்ட அமைப்புசாராத் துறையின் பொருளாதார நடவடிக்கைகள் முழுவதும் முறையாக அளவிடப்பட்டு 'ஜிடிபி' கணக்கீட்டில் சேர்க்கப்படுவதில்லை. வீடுகளில் நடைபெறும் உற்பத்தி செயல்பாடுகள் 'ஜிடிபி' கணக்கீட்டில் சேர்க்கப்படுவதில்லை. குறிப்பாக பெரும்பாலான பெண்களின் பொருளாதார நடவடிக்கைகள் மதிப்பிடப்பட்டி 'ஜிடிபி' கணக்கீட்டில் சேர்க்கப்படுவதில்லை. 'பெண்களின் வேலை' எனக் கருதப்படும் உணவு சமைத்தல், வீட்டுப் பராமரிப்பு வேலைகள், குழந்தைகள், முதியோர்களை பராமரிக்கும் பணிகள் போன்ற ஊதியமற்ற வேலைகள், தன்னார்வப் பணிகளின் மதிப்பு 'ஜிடிபி'யில் சேர்க்கப்படுவதில்லை.

கள்ளச் சந்தை நடவடிக்கைகள், சட்ட விரோதமான பரிவர்த்தனைகளும் 'ஜிடிபி' கணக்கீட்டில் வருவதில்லை.

'ஜிடிபி'-க்கு அளிக்கப்படும் அதீத முக்கியத்துவம் பொருளாதார சமமின்மையை அதிகரித்து சமூக நீதியை புறக்கணிப்பதற்கும், ஏற்றத்தாழ்வுள்ள சமூகத்தை என்றென்றும் நிலை நிறுத்துவதற்குமே உதவுகிறது.

---

## *இளைஞர் அரண் அறைகூவல்*

**இளைஞர்கள் தமக்கு அரண்!** ***தமிழ் மக்களுக்கு அரண்!***

### *அழைக்கிறது இளைஞர் அரண்!*

தமிழ்நாட்டின் மக்கள்தொகையில் இளைஞர்கள் சற்றொப்ப 30 விழுக்காடு இருப்பதாகக் கணிக்கப்படுகிறது. இளமையின் செயல்துடிப்பைக் கருத்தில் கொள்ளும் போது ,தமிழ்நாட்டின் வாழ்விலும் வளர்ச்சியிலும் இளைஞர்களின் பங்கு இந்த விழுக்காட்டையும் விஞ்சி நிற்கும் என்பதில் ஐயமில்லை.

தமிழ்நாட்டின் வரலாற்றில் இளைஞர்களின் பங்கு குறிப்பிடத்தக்கது. இந்திய விடுதலைப் போராட்டத்திலும், மொழியுரிமைப் போராட்டங்களிலும், பிற வகையிலான தமிழ்மக்களின் உரிமைப் போராட்டங்களிலும் இளைஞர்களின் பங்கு மகத்தானது.

கடந்த 2008-09 காலத்தில் தமிழீழ மக்களுக்கு எதிரான இனவழிப்புப் போர் உச்சம் தொட்ட போது ,"போரை நிறுத்து!" என்ற முழக்கத்துடன் பலதரப்பட்ட இளைஞர்களும் இலட்சக்கணக்கில் உணர்ச்சிப் பெருக்கோடு களங்கண்டனர். அப்போதைய இளைஞர் எழுச்சியின் ஒரு வெளிப்பாடாகவே வீரத்தமிழன் முத்துக்குமாரின் உயிரீகம் அமைந்தது. அது வரை தமக்குள்ள சிக்கல்களுக்காகக் கூடத் தெருவில் இறங்கிப் போராடியறியாத இளைஞர்களும் மாணவர்களும் கூட இப்போது ஈழத் தமிழர் இனவழிப்பைத் தடுக்கக் கிளந்தெழுந்து போராடக் கண்டோம். அந்தப் போராட்டம் தோல்வியில் முடிவுற்றாலும் அதன் தாக்கம் தமிழக மக்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்கு ஆழ்ந்த அரசியல் கல்வி புகட்டிச் சென்றது என்பதே மெய்.

மெரினாவில் ஒரு வசந்தம் என்று வரலாறும் இலக்கியமும் குறித்துக் கொண்ட சல்லிக்கட்டுப் போராட்டம் தமிழக இளைஞர்களும் மாணவர்களும் அனைத்துத் தரப்பு மக்களின் ஆதரவோடும் ஈட்டியதொரு பெருவெற்றியாகும்.

இன்றைய நிலையில் அரசின் கொள்கைகள் இளைஞர்தம் வாழ்வை நெருக்கடியில் தள்ளியுள்ளன. கல்வித் துறையில் வரைமுறையற்ற வணிகமயம் எல்லா நிலைகளிலும்

கல்வியைக் கடைச் சரக்காக்கி விட்டது. ஏழை எளிய, ஒடுக்குண்ட மாணவர்களுக்கு உயர்கல்வி எட்டாக்கனியாகி விட்டது. நீட் போன்ற தகுதிகாண் நுழைவுத் தேர்வுகள் மருத்துவம் போன்ற துறைகளில் ஒடுக்குண்ட விளிம்புநிலை மாணவர்களின் வாய்ப்பை மென்மேலும் பறித்துக் கொள்கின்றன. அனைவருக்கும் கல்வி எனும் கனவுகள் கரைந்து மறைந்து ஒருசிலருக்கு மட்டுமே கல்வி எனும் கெடுநிலை முழுமையாக மீண்டு வரும் அச்சுறுத்தல் வளர்ந்து வருகிறது.

இந்திய அரசு கொண்டுவந்துள்ள தேசியக் கல்விக் கொள்கை என்பது கல்வித் துறையை வணிகமயமாக்குவதோடு காவிமயமாக்கவும், மையத்தில் அதிகாரக் குவிப்பை வளர்க்கவுமான முயற்சியே ஆகும். இந்த முயற்சியை எதிர்த்து நின்று தமிழ்நாட்டின் நலன்களைக் காக்க வேண்டிய தமிழக அரசோ 'இல்லம் தேடிக் கல்வித் திட்டம்' எனும் பெயரில் அதே தேசியக் கல்விக் கொள்கையின் சில கூறுகளைச் செயலாக்க முற்பட்டுள்ளது. நீட் தேர்வைக் கூட நீக்கம் செய்ய முடியாத நிலையில் தமிழ்நாட்டின் சமூகநீதி மரபு என்பதெல்லாம் சொல்லளவிலேயே நிற்கிறது. உயர்கல்வியில் மட்டுமின்றி பள்ளிக் கல்வியிலேயே தமிழ்நாட்டில் தமிழ்வழிக் கல்வியின் பரப்பு மென்மேலும் சுருக்கப்பெறும் அவலம் காணப்படுகிறது. ஆங்கிலம், இந்தி, சமற்கிருதம் ஆகிய அயல்மொழிகளின் திணிப்பு அன்னைத் தமிழைக் காணாமலாக்கி வருகிறது. எங்கும் தமிழ், எதிலும் தமிழ் என்ற முழக்கம் மறந்து போய் எங்கே தமிழ்? எதிலே தமிழ்? என்று கேட்கும் நிலை தலைதூக்கி வருகிறது.

***இந்தப் போக்கினை எதிர்த்துப் போராடித் தமிழ்நாட்டின் கல்வியைக் காக்கவும் அறிவியல், அறவியல் நோக்கில் மாற்றியமைக்கவும் வேண்டும் என்பது தமிழ்நாட்டு இளைஞர்கள் மாணவர்களின் முன்னுள்ள கடமை.***

மாறாக, சமூக வலைத்தளங்களின் கூடாப் பயன்பாடும் சமூகக் குடிப் பழக்கம் எனப்படும் கூடிக் குடிப்பதும், போதைக்கு அடிமைப்பட்ட நிலையும், வன்முறைப் பண்பாடும் ஆபாசச் செயல்பாடுகளும் சாதி சமய வெறியும் நம் இளைஞர்கள்-மாணவர்களின் எதிர்காலத்தைக் கேள்விக் குறியாக்கியுள்ளன. இளைஞர்கள் இந்தச் சமூகத்தை மாற்றியமைக்கவும் தங்களைத் தாங்களே மாற்றியமைத்துக் கொள்ளவும் வேண்டிய கடமை உள்ளது.

***பொருளியல் நோக்கில் மட்டுமல்ல, தன்மதிப்பு நோக்கிலும் நம் இளைஞர்கள் முகங்கொடுக்க வேண்டிய பெருந்துயராக வேலையின்மைச் சிக்கல் உருவெடுத்து நிற்கிறது. முதலிய வளர்ச்சிப் பாதைக்கே உரித்தான வறுமையும் வேலையின்மையும் புதுத்தாராளியத்தால் மேலும் மோசமாக்கப்பட்டுள்ளன. அனைத்து வகையான சுரண்டலும்***

***ஒடுக்குமுறையும் இதனால் கடுமையாகியுள்ளன.***

***தனியார் துறையில் மட்டுமின்றி பொதுத் துறையிலும் அரசுத் துறையிலும் கூட ஒப்பந்தப் பணியாளர் முறை கோலோச்சுகிறது. தமிழக அரசின் மின்வாரியம் போன்ற நிறுவனங்களில் ஒப்பந்தமில்லாத ஒப்பந்தத் தொழிலாளர் முறை ஒளிவுமறைவின்றி வழங்கி வருகிறது.***

தமிழ்நாட்டின் வேலைவாய்ப்பு அலுவலகங்களில் பதிவு செய்யப்பட்டுள்ள படி சற்றொப்ப ஒன்றரைக் கோடி இளைஞர்கள் (இளைஞர்கள் மட்டுமல்ல) வேலையில்லாது திண்டாடிக் கொண்டிருக்கின்றனர். பதிவு செய்யப்படாதவர்களின் தொகை இன்னும் பெரிது. இந்தச் சேம உழைப்புப் பட்டாளத்தின் அளவு நாளும் பெருகி வருகிறது. வேலையற்றோரைக் காட்டி அரைத் தொழிலாளர்களும் அரைத் தொழிலாளரைக் காட்டி அமைப்புசார் தொழிலாளர்களும் அச்சுறுத்தி ஒடுக்கப்படுகின்றனர். அனைத்து உழைப்பாளர்களையும் ஒன்றுபடுத்தி ஓரணியில் திரட்டும் பணி இளைஞர்களுக்காகக் காத்துள்ளது.

தமிழ்நாட்டின் உரிமைப் போராட்ட அரசியலில் இளைஞர்கள் வகித்து வந்த பங்கினை அரசுகள் திட்டமிட்டே ஒழித்து விட்டன எனலாம். குறிப்பாகக் கல்லூரிகளில் மாணவர் தலைவர் தேர்தல்கள் தடை செய்யப்பட்டன. எல்லாத் தடைகளையும் மீறி சமூக அக்கறை கொண்டு பல்வேறு உரிமைப் போராட்டங்களில் ஈடுபடும் மாணவர்களை அரசு அடக்கி ஒடுக்கி விடுகிறது. மாணவர்கள் கல்லூரிக்குள் அரசியல் பேச முடியாத நிலைக்குத் தள்ளப்படுகிண்றனர்.

ஆனாலும் கடந்த பத்தாண்டுகளில் இளைஞர்கள்-மாணவர்களின் அரசியல் ஆர்வம் மீண்டும் துளிர்த்துள்ளது. மறுபுறம் எண்பதுகளுக்குப் பிறகு தலைதூக்கிய சாதி சமயக் குறுநோக்குக் கட்சிகள் ,அமைப்புகளின் தாக்கம் இளைஞர்கள், மாணவர்களையும் தொற்றியுள்ளது. பள்ளி கல்லூரிகளில் சாதி அடையாளங்களைக் கட்டித் திரியும் போக்கு பெருகியுள்ளது. இது தமிழ்ச் சமூகத்திற்கு பெருங்கேடு. மாணவர்கள் இளைஞர்களின் ஒற்றுமைக்கு மட்டுமல்லாமல் மக்கள் ஒற்றுமைக்கும் வேட்டு வைக்கும் படியான பெருங்கேடு.

சமூக நீதி என்பது இட ஒதுக்கீடு மட்டுமன்று. ஆனால் இட ஒதுக்கீடு இல்லாமல் சமூக நீதி இல்லை. இட ஒதுக்கீட்டுக்கான சமூக நீதிப் போராட்ட அரசியல் சாதியப் பதவி அரசியல் சிக்கிக் கொண்டுள்ளது. இதனால் மாணவர்கள் இளைஞர்கள் இடையே இட ஒதுக்கீடு குறித்து அலட்சியமும் அவநம்பிக்கையும் வளர்ந்துள்ளன. இட ஒதுக்கீட்டுக்கு வழிகாட்டியாகப் பெயர் பெற்ற தமிழ்நாட்டிலேயே சமூகநீதிக்கு எதிரான குரல்கள் உரக்க ஒலிப்பதைத் தமிழ்நாட்டின்

மெய்யான சமூகநீதி ஆற்றல்கள் எச்சரிக்கையாகக் கொள்ள வேண்டும். இடஒதுக்கீட்டுக் கோரிக்கைகளை சாதிய அரசியலுக்கு உரமாக்கிக் கொள்ளும் முயற்சிகளைத் தமிழ்நாட்டு இளைஞர்கள் முறியடிக்க வேண்டும். பொருளியலில் நலிந்த பிரிவினர் (EWS) என்ற பெயரில் இடஒதுக்கீட்டின் அடித்தளங்களைத் தகர்க்கும் நச்சுத் திட்டங்களையும் தமிழ்நாட்டுக்குள் நுழைய விடாமல் தடுக்க வேண்டும்.

சாதிச் சமூகத்தின் காவல் கோட்டமாக விளங்கும் சொந்த சாதிக்குள் மணம் செய்யும் அகமண முறையைத் தகர்க்க இளைஞர்களால் மட்டுமே இயலும். இந்த அகமணமுறையைக் காக்க வேண்டி அவ்வப்போது ஆணவக் கொலைகள் நடப்பது தமிழ்நாடே வெட்கித்தலைகுனிய வேண்டிய செய்தி. இதனால் தமிழர் ஓர்மை சிதைக்கப்படுவதை உணர வேண்டும். காதலையும் காதலர்களையும் பேணிக் காப்பதை இளைஞர்கள் கடமையாகக் கொள்ள வேண்டும்.

பெண்களுக்கும் குழந்தைகளுக்கும் எதிராக வன்கொடுமைகள் நடக்கும் போதெல்லாம் தமிழன்னையின் முகத்தில் கரி பூசப்படுகிறது. பாலியல் கல்வியும், பாலின நிகர்மை நோக்கும், மாற்றுப் பாலினத்தவர் பற்றிய புரிதலும் நம் இளைஞர்களுக்குத் தேவை..

சமூகத்தில் சரிபாதியான பெண்கள் கடந்த காலத்துடன் ஒப்பிட்டால் துறை தோறும் துறைதோறும் ஓரளவு முன்னேறியுள்ளனர். அவர்களின் உழைப்புக்கும் ஆற்றலுக்கும் தடைகளை வென்ற போராட்டத்துக்கும் கிடைத்துள்ள வெற்றி இது. அடுப்பூதும் பெண்களுக்குப் படிப்பு எதற்கு? என்ற காலம் மலையேறி விட்டது. பொதுத் தேர்வு முடிவுகள் வரும் போதெல்லாம் ஆண்களைப் பின்னுக்குத் தள்ளி விட்டு முன்னுக்கு நிற்கும் பெண்களைப் பார்த்து நாடே பூரிக்கிறது. பெண்களின் அரசியல் விழிப்புணர்வும் பங்கேற்பும் ஓரளவு வளர்ந்திருப்பினும் ஆணாதிக்கச் சமூகம் தொடர்ந்து முட்டுக்கட்டை இடக் காண்கிறோம். அரசியலில் %33 இட ஒதுக்கீடு என்பது ஆணாதிக்கச் சுவரைத் தாண்ட முடியாமல் ஆண்டுக்கணக்கில் கூண்டுக் கிளியின் பேச்சாகவே இருந்து வருகிறது. இடஒதுக்கீட்டால் பெண் பதவி பெற்றுள்ள இடத்தும் பெரும்பாலும் ஆணின் கைப்பாவையாக இருக்கவே உரிமம் தரப்பட்டுள்ளது

கல்விக்கூடங்கள், பணியிடங்கள், அலுவலகங்கள், வழிபாட்டுக்கூடங்கள், பயண ஊர்திகள் என்று எல்லா இடங்களிலும் பெண்களுக்கு எதிரான பாலியல் சீண்டல்கள் நீக்கமற நிறைந்துள்ளன. வீட்டுக்குள்ளேயும் அவர்களுக்கு எதிரான குடும்ப வன்முறை தனிச் சட்டம் போட்டும் அடங்க மறுக்கிறது.

எல்லாத் துறைகளிலும் பெண்ணுரிமைக்காகவும் பெண் விடுதலைக்காகவும் ஆண்-பெண் நிகர்மைக்காகவும் போராடும் கடமை பெண்களுக்கு மட்டுமல்ல, அனைத்து இளைஞர்களுக்கும் உண்டு. இன்று பூவுலகை அவசரமாக அச்சுறுத்திக் கொண்டிருக்கும் புவி வெப்பமாதல், காலநிலை மாற்றம், போன்ற சூழலியல் சீர்கெடுகள் பற்றி உணர்வு பெறுவதும் மக்களுக்கு உணர்வூட்டுவதும் இளைஞர்களின் உடனடிக் கடமையாகும்.

தமிழ்ச் சமூகம் முகங்கொடுக்கும் சிக்கல்களையும் அவற்றுக்குரிய தீர்வுகளையும் எண்ணிப்பார்த்துச் செயலாற்றும் பெருங்கடன் இளைஞர்களைச் சாரும்.

ஆகவே தமிழ்நாட்டு இளைஞர்களே !மாணவர்களே !சமூக அநீதிகளுக்கு எதிராக நாம் ஓரணியாகத் திரண்டு உறுதியாகப் போராட இளைஞர் அரண் உங்களை அறைகூவி அழைக்கிறது,

**நாம் நமக்கு அரண், நம் தமிழ் மக்களுக்கு அரண்!**

**நாமே இளைஞர் அரண்!**

## இளைஞர் அரண் முழக்கங்கள்:

*அனைவர்க்கும் கல்வி! அனைவர்க்கும் வேலை!*

*கல்வியும் வேலையும் அடிப்படை உரிமைகள்!*

*சமூகநீதி! சரிநிகர்வாழ்வு!*

*தமிழர் ஓர்மை! தமிழ்நாட்டின் உரிமை!*

*அறவாழ்வு! அறிவியல் நோக்கு!*

*புவிநேயம்! இயற்கைச் சூழல் நேயம்!*

*இரந்து கேட்கும் சலுகைகள் இல்லை!*

*இளையோர் எழுப்பும் உரிமை முழக்கம்!*

**நாம் நமக்கு அரண்!**

**நம் தமிழ் மக்களுக்கு அரண்!**

**நாமே இளைஞர் அரண்!**

**++++ இளைஞர் அரண் ++++**



அகவை 22இல் தூக்குக் கொட்டடியில் CAPITAL படிக்கத் தொடங்கினேன். அகவை 25இல் தமிழாக்கம் செய்யத் தொடங்கினேன். அகவை 30இல் மூன்று இயல்களும் மொழிபெயர்த்து முடித்தேன். 1985இல் சிறையிலிருந்து விடுதலையான பின் தோழர் ரா. கிருஷ்ணையா அவர்களுடன் சேர்ந்து ஏழாண்டுக் காலம் உழைத்து அச்சுக்கு அணியமாக்கினேன். இப்போதும் மார்க்சைத் தூயதமிழுக்குப் பழக்கும் பணியில்தான் ஈடுபட்டுள்ளேன். இத்துணை நீண்ட பழக்கத்துக்குப் பிறகும் மார்க்சும் மூலமுதலும் எனக்குப் புதிது புதிதாய்க் கற்றுத்தரவே காண்கிறேன்.

மார்க்சியச் செவ்வியல் இலக்கியங்களைப் பெரும்பாலும் ஆங்கிலத்தில் படிக்கும் வாய்ப்புப் பெற்ற சிறு கூட்டத்தில் நானும் ஒருவன். ஆனால் மார்க்சியம் கற்க விரும்பும் ஒவ்வொரு தமிழனும் தமிழச்சியும் ஆங்கிலம் அல்லது ஏதேனுமோர் அயல்மொழி கற்று அதன்வழி மார்க்சியம் கற்பது என்றால் அதற்கு வாய்ப்பும் இல்லை, தேவையும் இல்லை. நேராகத் தமிழிலேயே மார்க்சியம் பயிலும் வாய்ப்பு தமிழ் மட்டுமறிந்த உழைக்கும் தமிழர்களுக்கு, குறிப்பாக இளைஞர்களுக்குக் கிடைக்கச் செய்ய வேண்டும். அவர்கள் அறிவுக் கங்குண்டு இம்மண்ணில் செந்தீ விதைப்பார்கள் என்பதில் எனக்கு ஐயமில்லை.

**தியாகு**


தமிழ்த் தேசம்


**தியாகு**

# மார்க்சியம்

*அனா ஆவன்னா...*


தூயதமிழ்ப் பதிப்பு







# நூலுக்கான இணைப்பு கீழே

**https://www.amazon.in/dp/B09Q29KJV2**




**"கியூபாவின் புரட்சிப்பெண்கள்" நூலுக்கான இணைப்பு கீழே:**

**https://www.amazon.in/dp/B09Q99MPN5**




**"சூழலியல் அடிப்படைகள்" நூலுக்கான இணைப்பு கீழே**

**https://www.amazon.in/dp/B09R4VXL2F**